# 5

# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

## 5.1 பொதுநோக்கு

*இலங்கையின் வெளிநாட்டுத்துறை 2020இல் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் காரணமாக மிகப்பெரும் பின்னடைவினை சந்தித்ததுடன் அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் துரிதமான கொள்கை வழிமுறைகளையும் தேவைப்படுத்தியது. வைரஸ் பரவிய மற்றும் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மிகத் தீவிரமாக இடம்பெற்ற மாதங்களில் வணிகப்பொருள் ஏற்றுமதிகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன, ஆனாலும் நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டத்திற்கு அண்மித்ததாக எதிர்பார்த்ததிலும் பார்க்க விரைவாக மீண்டது. அநேகமான அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகள் மற்றும் தாழ்ந்த மசகெண்ணெய் விலைகள் என்பனவற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில், வணிகப்பொருள் இறக்குமதிகள் 2020இல் கணிசமான வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் காணப்பட்ட படிப்படியான மீட்சி மற்றும் வணிகப்பொருள் இறக்குமதிகளின் மீதான செலவினத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி என்பனவற்றின் இணைந்த தாக்கம் காரணமாக வர்த்தகப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்து, 2010 இற்குப் பின்னர் மிகக் குறைந்த வர்த்தகப் பற்றாக்குறையினைப் பதிவுசெய்தது. உலகளாவிய தனிமைப்படுத்தல் வழிமுறைகள் காரணமாகவும் 2020 மாச்சுப் பிற்பகுதியிலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டின் எல்லை மூடப்பட்டிருந்தமையின் காரணமாகவும் சுற்றுலாத் துறையின் இயலாற்றல் பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான இடையூறுகளைத் தொடர்ந்து, சுற்றுலாப் பயணிகளுக்காக எல்லைகளைத் திறந்த ஒரு சில ஆசிய நாடுகளிடையே இலங்கையும் ஒரு நாடாக விளங்கி, 2021 சனவரியிலிருந்து சுற்றுலாப் பயணிகளுக்கு அதன் எல்லையினைப் படிப்படியாகத் திறந்தது. புதிய இயல்பு நிலைமைகளால் உருவாக்கப்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக கணனிப் பணிகள் துறையின் வளர்ச்சியில் கவனிக்கத்தக்க அதிகரிப்பு 2020இல் அவதானிக்கப்பட்டது. எனினும், ஏனைய பணிகள் துறைக்கான, குறிப்பாக, கடல் மற்றும் வான் சரக்குப் பணிகளுக்கான, உட்பாய்ச்சல்கள் மிதமானவையாகக் காணப்பட்டன. உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்ப மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சியிலிருந்தும் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக மீளெழுந்த தொழிலாளர் பணவனுப்பல்கள் இவ்வாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. 2020இல் முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்கள், அரச பிணையங்களின் வெளிநாட்டு உடமைகள் மீதான குறைந்த வட்டி மற்றும் நறுக்குக் கொடுப்பனவுகள் அதேபோன்று நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளிலிருந்தான பங்கிலாபம் மற்றும் மீள்முதலிடப்பட்ட வருவாயின் மீதான தாழ்ந்த கொடுப்பனவுகளினால் 2020இல் மிதமடைந்தன. இவ்வபிவிருத்திகள் 2020இல் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை ஐ.அ.டொலர் 1.1 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைவதற்கு வழியமைத்ததுடன் இது மொ.உ.உற்பத்தியில் 1.3 சதவீதத்திற்கும் வகைகூறியது. அதிகரித்தளவிலான நிச்சயமற்ற தன்மைகளுடன் 2020இல் ஒப்பீட்டளவில் சிறிதளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அவதானிக்கப்பட்டதுடன் தற்பொழுது இடம்பெற்றுவரும் செயற்றிட்டங்கள் தொடர்பிலேயே பெருமளவில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் காணப்பட்டன. அதேவேளை, உலகளாவிய*

5

*நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட உலகளாவிய நிதியியல் சந்தையின் குழப்பங்களின் தூண்டலின் காரணமாக அரச பிணையங்கள் சந்தையிலிருந்தும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தும் வெளிப்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்டன. மாச்சு, ஏப்பிறல் மற்றும் நவெம்பர் இறுதியிலிருந்து தற்காலிகமான தளம்பல்கள் அவதானிக்கப்பட்ட போதும் 2020இல் செலாவணி வீதம் தேய்மானமடைந்ததாயினும் ஒப்பீட்டு ரீதியில் உறுதியாகவே காணப்பட்டது. தளம்பல் காலப்பகுதியில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்தமையின் மூலமும் வங்கிகளுக்கிடையிலான விற்றல் - வாங்கல் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளில் ஈடுபட்டமையின் மூலமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தீவிரமாகத் தலையிட்டது. எனினும், தேறிய அடிப்படையில், மத்திய வங்கி, 2020இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. வெளிநாட்டுக் கடன்பாடுகளுக்காக, பன்னாட்டு நிதியியல் சந்தைகளை அணுகுவதில் தடைகள் காணப்பட்ட போதும், இலங்கை படுகடன் தீர்ப்பனவுகளில் அப்பழுக்கற்ற பதிவுகளைப் பேணிக் கொண்டது. இருப்பினும், ஒவ்வோராண்டும் கொடுக்க வேண்டிய பாரிய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் இன்னும் சில ஆண்டுகளுக்குத் தொடர்வது தொடர்ந்தும் சவாலொன்றாகவே இருக்கும். இச்சவால்களைப் புரிந்துகொண்டு வெளிநாட்டுத் துறையின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டுத் தன்மையினை உறுதிப்படுத்தி நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் சுமையினைப் படிப்படியாகக் குறைக்கும் நோக்குடன் படுகடனை உருவாக்காத வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டுப் பொருளாதாரத்தினைப் பலப்படுத்துவதற்கு இலக்கினால் தூண்டப்படும் நிகழ்ச்சித்திட்டமொன்று வெளிநாட்டுத் துறையினை உறுதிப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் முக்கிய கொள்கை முன்னெடுப்பாக அரச மற்றும் தனியார் துறைகளின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சித்திட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் திட்டமிடப்பட்ட இறைத்திரட்சி, சென்மதி நிலுயையின் மீதான மிகையான இறை விரிவாக்கத்தின் கசிவுத் தாக்கத்தினை குறைவடையச் செய்யுமெனவும் இதன் மூலம் எதிர்காலத்தில் வெளிநாட்டுத் துறையின் உறுதித்தன்மை மேம்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.*


அட்டவணை 5.1
சென்மதி நிலுவை பகுப்பாய்வு வெளிப்படுத்துகை

| விபரம் | ஐ.அ.டொ. மில்லியன் | | ரூபா. மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2019 (அ) | 2020 (ஆ) | 2019(அ) | 2020 (ஆ) |
| **நடைமுறை கணக்கு (தேறிய)** | **-1,843** | **-1,083** | **-330,114** | **-220,370** |
| **வர்த்தக நிலுவை** | **-7,997** | **-6,008** | **-1,430,232** | **-1,115,988** |
| ஏற்றுமதிகள் | 11,940 | 10,047 | 2,134,796 | 1,858,927 |
| இறக்குமதிகள் | 19,937 | 16,055 | 3,565,028 | 2,974,915 |
| **பணிகள் (தேறிய)** | **2,849** | **819** | **510,822** | **150,014** |
| பெறுகைகள் | 7,474 | 3,035 | 1,337,540 | 559,615 |
| கொடுப்பனவுகள் | 4,625 | 2,216 | 826,718 | 409,601 |
| **முதலாந்தர வருமானம் (தேறிய)** | **-2,462** | **-2,101** | **-441,394** | **-405,184** |
| பெறுகைகள் | 252 | 198 | 44,989 | 36,766 |
| கொடுப்பனவுகள் | 2,713 | 2,300 | 486,383 | 441,951 |
| **இரண்டாந்தர வருமானம் (தேறிய)** | **5,766** | **6,207** | **1,030,690** | **1,150,789** |
| இரண்டாந்தர வருமானம்: வரவு | 6,726 | 7,117 | 1,202,334 | 1,319,377 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,717 | 7,104 | 1,200,766 | 1,317,007 |
| அரசாங்க மாற்றல்கள் | 9 | 13 | 1,568 | 2,371 |
| இரண்டாந்தர வருமானம்: செலவு | 960 | 910 | 171,644 | 168,589 |
| **மூலதன கணக்கு (தேறிய)** | **23** | **28** | **4,095** | **5,193** |
| மூலதன கணக்கு : வரவு | 51 | 51 | 9,054 | 9,472 |
| மூலதன கணக்கு : செலவு | 28 | 23 | 4,959 | 4,279 |
| **நடைமுறை மற்றும் மூலதன கணக்கு (தேறிய)** | **-1,820** | **-1,055** | **-326,019** | **-215,178** |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,460** | **-260** | **-441,794** | **-52,625** |
| **நேரடி முதலீடு : சொத்துக்கள்** | **77** | **15** | **13,830** | **2,699** |
| **நேரடி முதலீடு : பொறுப்புகள்** | **743** | **434** | **132,916** | **80,556** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : சொத்துக்கள்** | **-** | **-** | **-** | **-** |
| **சொத்துப் பட்டியல் முதலீடு : பொறுப்புக்கள்** | **2,313** | **-2,383** | **408,854** | **-441,886** |
| பங்கு மூலதனம் | -4 | -217 | -1,106 | -40,187 |
| படுகடன் பிணையங்கள் | 2,317 | -2,166 | 409,960 | -401,700 |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு : சொத்துக்கள்** | **100** | **-136** | **17,823** | **-27,446** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | -93 | 64 | -16,796 | 11,666 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -4 | -224 | -680 | -41,647 |
| ஏனைய பெறத்தக்க கணக்குகள் | 196 | 24 | 35,299 | 2,535 |
| **ஏனைய முதலீடு : பொறுப்புகள்** | **-82** | **383** | **-12,878** | **66,980** |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 167 | -15 | 31,079 | -3,519 |
| கடன்கள் | -245 | 327 | -43,494 | 57,980 |
| மத்திய வங்கி | 327 | -14 | 58,277 | -2,689 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -281 | 75 | -50,904 | 10,390 |
| மத்திய அரசாங்கம் | -89 | 169 | -14,387 | 31,961 |
| ஏனைய துறைகள் | -203 | 96 | -36,479 | 18,319 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -28 | 185 | -5,577 | 32,565 |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | 24 | -114 | 5,114 | -20,046 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்கு சொத்துக்கள்** | **337** | **-1,704** | **55,445** | **-322,229** |
| நாணய தங்கம் | -14 | -667 | -2,614 | -123,485 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 6 | -5 | 1,080 | -825 |
| ப.நா.நி இல் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கு சொத்துக்கள் | 346 | -1,032 | 56,979 | -197,919 |
| நாணயம் மற்றும் வைப்புகள் | 361 | -177 | 59,518 | -37,326 |
| பிணையங்கள் | -19 | -856 | -3,039 | -160,807 |
| **தேறிய பிழைகளும் தவறுகளும்** | **-640** | **795** | **-115,775** | **162,553** |
| **திரண்ட நிலுவை (இ)** | **377** | **-2,328** | **62,296** | **-405,854** |
| **மொ.உ.உ. இன் சதவீதமாக** | | | | |
| வர்த்தக நிலுவை | -9.5 | -7.4 | | |
| பொருட்கள் மற்றும் பணிகள் | -6.1 | -6.4 | | |
| நடைமுறை கணக்கு | -2.2 | -1.3 | | |
| நடைமுறை மற்றும் மூலதன கணக்கு | -2.2 | -1.3 | | |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) திரண்ட நிலுவையைக் கணிப்பிடுவது தொடர்பில் அட்டவணை 5.11 பார்க்குக


*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.1
வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம்




5

வரைபடம் 5.2
சென்மதி நிலுவை




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

## 5.2 நடைமுறைக் கணக்கு நிலுவை

**பணிகள் கணக்கின் மிகையில் குறிப்பிடத்தக்க குறைப்பு பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும், 2020இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவிற்கு சுருக்கமடைந்தமைக்கு கணிசமானளவிற்குக் குறைவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை, அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான முதலாந்தர வருமானப் பற்றாக்குறை என்பன ஆதரவாக அமைந்திருந்தன.** 2020இல் வர்த்தகப் பற்றாக்குறை ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.0 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு அத்தியாவசியமல்லாத பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் அதேபோன்று தளர்த்தப்பட்ட மசகெண்ணெய் விலைகள் என்பனவற்றினைத் தொடர்ந்து இறக்குமதிச் செலவினம் குறைவடைந்தமை முக்கிய காரணமாகும். தகவல் தொழில்நுட்பத்தினை முதன்மையாகக் கொண்ட வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்கின்ற பணிகளுடன் தொடர்பான கணக்குகளின் பேரில் அதிகரித்த உட்பாய்ச்சல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் பணிகள் கணக்கின் மிகை கடுமையாக வீழ்ச்சியடைந்தமைக்கு சுற்றுலாப் பயணிகள் துறை சரிவடைந்தமையும் வான் மற்றும் கடல் சரக்குப் போக்குவரத்துப் பணிகளில் ஏற்பட்ட இடையுறுகளுமே காரணங்களாக அமைந்தன. முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறை சுருக்கமடைந்தமைக்கு அரச பிணையங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் மீதான வட்டி மற்றும் கூப்பன் கொடுப்பனவுகளிலும் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் பங்கிலாபங்கள் தொடர்பான கொடுப்பனவுகளிலும் மீள்முதலிடப்பட்ட வருவாய்களிலும் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பாக, 2020இன் பின்னரைப் பகுதியில், எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்வாக இருந்தமையின் காரணமாக இரண்டாந்தரக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் அதிகரித்தன. இவ்வபிவிருத்திகள் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இன் ஐ.அ.டொலர் 1.8 பில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 1.1 பில்லியனுக்குக் குறுக்கமடைய வழிவகுத்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2019இன் 2.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 1.3 சதவீதத்தில் காணப்பட்டது.

அட்டவணை 5.2
நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு


ஐ.அ.டொலர் மில்லியன்

| விடயம் | 2019 (அ) | | | 2020 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | செலவு | தேறிய | வரவு | செலவு | தேறிய |
| **பொருட்கள் மற்றும் பணிகள்** | **19,414** | **24,562** | **-5,148** | **13,083** | **18,271** | **-5,189** |
| **பொருட்கள்** | **11,940** | **19,937** | **-7,997** | **10,047** | **16,055** | **-6,008** |
| பொது வணிகம் | 11,940 | 19,935 | -7,995 | 10,047 | 16,047 | -5,999 |
| நாணயமல்லா தங்கம் | - | 3 | -3 | - | 9 | -9 |
| **பணிகள்** | **7,474** | **4,625** | **2,849** | **3,035** | **2,216** | **819** |
| போக்குவரத்து | 2,339 | 1,710 | 630 | 1,174 | 1,059 | 114 |
| கடல்வழி போக்குவரத்து | 1,155 | 820 | 335 | 702 | 635 | 67 |
| சரக்குத் தொகுதி | 1,155 | 820 | 335 | 702 | 635 | 67 |
| வான்வழி போக்குவரத்து | 1,184 | 889 | 295 | 472 | 424 | 48 |
| பயணிகள் | 1,056 | 798 | 258 | 394 | 354 | 40 |
| சரக்குத் தொகுதி | 128 | 91 | 37 | 78 | 71 | 7 |
| பயணம் (இ) | 3,607 | 1,638 | 1,969 | 682 | 449 | 234 |
| கட்டுமானம் | 67 | 35 | 32 | 7 | 10 | -3 |
| காப்புறுதியும் ஓய்வூதியப் பணிகளும் | 137 | 102 | 36 | 39 | 82 | -42 |
| நிதியியல் பணிகள் | 213 | 470 | -258 | 96 | 220 | -125 |
| தொலைத்தொடர்பு மற்றும் கணனி பணிகள் | 1,054 | 515 | 539 | 995 | 288 | 706 |
| தொலைத்தொடர்புகள் | 155 | 135 | 21 | 24 | 32 | -8 |
| கணனி பணிகள் | 899 | 380 | 519 | 971 | 257 | 714 |
| ஏனைய வியாபார பணிகள் | 35 | 78 | -43 | 16 | 37 | -21 |
| அரச பொருட்கள் மற்றும் பணிகள் வே.இ.உ.இ. | 21 | 77 | -56 | 26 | 70 | -44 |
| **முதலாந்தர வருமானம்** | **252** | **2,713** | **-2,462** | **198** | **2,300** | **-2,101** |
| ஊழியர்களுக்கான நட்டஈடு | 31 | 130 | -99 | 36 | 132 | -96 |
| முதலீட்டு வருமானம் | 220 | 2,583 | -2,363 | 162 | 2,167 | -2,006 |
| நேரடி முதலீடு | 26 | 855 | -828 | 17 | 619 | -602 |
| பங்கு இலாபங்கள் | 14 | 595 | -581 | 14 | 428 | -414 |
| மீள் முதலிடப்பட்ட வருவாய்கள் | 13 | 260 | -247 | 3 | 191 | -188 |
| சொத்துப் பட்டியல் முதலீடு | - | 1,044 | -1,044 | - | 932 | -932 |
| பங்கு மூலதனம் | - | 67 | -67 | - | 18 | -18 |
| வட்டி | - | 976 | -976 | - | 914 | -914 |
| குறுங்காலம் | - | 8 | -8 | - | 2 | -2 |
| நீண்டகாலம் | - | 969 | -969 | - | 911 | -911 |
| ஏனைய முதலீடு | 97 | 685 | -588 | 56 | 617 | -560 |
| ஒதுக்கு சொத்துக்கள் | 97 | - | 97 | 89 | - | 89 |
| **இரண்டாந்தர வருமானம்** | **6,726** | **960** | **5,766** | **7,117** | **910** | **6,207** |
| பொது அரசாங்கம் | 9 | - | 9 | 13 | - | 13 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 6,717 | 960 | 5,757 | 7,104 | 910 | 6,194 |
| **நடைமுறை கணக்கு** | **26,392** | **28,236** | **-1,843** | **20,398** | **21,481** | **-1,083** |
| **மூலதன கணக்கு** | **51** | **28** | **23** | **51** | **23** | **28** |
| மூலதன மாற்றல்கள் | 51 | 28 | 23 | 51 | 23 | 28 |
| பொது அரசாங்கம் | 16 | - | 16 | 24 | - | 24 |
| கூட்டுத்தாபனங்கள் மற்றும் வீட்டுத்துறை | 34 | 28 | 7 | 27 | 23 | 4 |
| **நடைமுறை மற்றும் மூலதனக் கணக்கு** | **26,443** | **28,263** | **-1,820** | **20,449** | **21,504** | **-1,055** |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட பயணிகள் பணிகள் என்பன போக்குவரத்துப் பணிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன


*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.3
ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை
(ஐ.அ.டொ. பில்லியன்)




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.4
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2020




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

## 5.2.1 பொருட்களிலான வர்த்தகக் கணக்கு

### வர்த்தக நிலுவை

**வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறை 2019இன் ஐ.அ.டொலர் 7,997 மில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 6,008 மில்லியனுக்குக் கணிசமாகச் சுருக்கமடைந்தது.** வர்த்தகக் கணக்கில் ஏற்பட்ட இம்முன்னேற்றம், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்பான பின்னடைவினைத் தொடர்ந்து ஏற்றுமதி வருவாய்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க விரைவாக உலகளாவிய நோய்த்தொற்றிற்கு முன்னருள்ள நிலைமையினை அடைந்தமை மற்றும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த உலகளாவிய எண்ணெய் விலைகளுடன் சேர்ந்து, அத்தியவசியமல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தமை என்பனவற்றின் இணைந்த விளைவாகும். இதன் காரணமாக, 2010இற்குப் பின்னர் மிகக் குறைந்த பற்றாக்குறையினை 2020இல் வர்த்தகப் பற்றாக்குறை பதிவுசெய்திருக்கிறது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2019இன் 9.5 சதவீதத்திலிருந்த 2020இல் 7.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயலாற்றம், வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகத்தின் போக்கு

### ஏற்றுமதிச் செயலாற்றம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக கட்டுப்பாட்டு வழிமுறைகள் மிகத் தீவிரமாகக் காணப்பட்ட மாத காலப்பகுதியில் வணிகப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனவெனினும் அவை நோய்த்தொற்று காணப்பட்டமைக்கு முன்னருள்ள மட்டத்திற்கு எதிர்பார்க்கப்பட்டமையிலும் பார்க்க விரைவாக மீட்சியடைந்தன. கொவிட்-19 பரவலைத் தடுப்பதற்காக இலங்கையில் நடைமுறைக்கிடப்பட்ட முடக்கல்கள் மற்றும் ஏனைய பொதுமக்களுக்கான சுகாதாரக் கட்டுப்பாடுகள் என்பன 2020இல் ஏற்றுமதி செய்யத்தக்க பொருட்களின் உற்பத்தியை எதிர்க்கணியமாகப் பாதித்தன. அதேவேளை, குறைவடைந்த வெளிநாட்டுக் கேள்வி, கப்பலேற்றல் மற்றும் வழங்கல் சங்கிலிகளுக்குக் காணப்பட்ட தடங்கல்கள், வெளிநாடுகளில் காணப்பட்ட முடக்கல் வழிமுறைகளின் காரணமாக அவசியமான உள்ளீடுகளை இறக்குமதி செய்வதிலுள்ள பிரச்சனைகள் மற்றும் மோசமான விலை அசைவுகள் என்பனவும் இவ்வாண்டுப்பகுதியில் ஒட்டுமொத்த ஏற்றுமதிச் செயலாற்றத்தினைப் பாதித்தன. இதன் விளைவாக, ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2020இல் ஐ.அ.டொலர் 10,047 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. இது 2019 உடன் ஒப்பிடுகையில் 15.9 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியாகும். மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, 2020இல் ஏற்றுமதி வருவாய்கள் 2019இன் 14.2 சதவீதத்திலிருந்து 12.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிகளில் மிகப்பெரிய ஆண்டிற்கு ஆண்டு வீழ்ச்சிகள் 2020இன் மாச்சு, ஏப்பிறல் மற்றும் மே மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட வேளையில், கொவிட்-19 உடன் தொடர்பான சுகாதாரக் கட்டுப்பாடுகள் தீவிரமாகக் காணப்பட்ட 2020இன் யூன், ஒத்தோபர் மற்றும் நவெம்பர் மாதங்களில் கணிசமான குறைப்பு பதிவுசெய்யப்பட்டது. யூலையிலும் செத்தெம்பரிலும் ஏற்றுமதி வருவாய்கள் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதங்களிலும் பார்க்க உயர்வாக இருந்தமைக்கு தனியாள் பாதுகாப்புச் சாதனங்களின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே காரணமாகும். 2019 உடன் ஒப்பிடுகையில் கைத்தொழில் பொருட்களில் பெரும்பாலானவை ஏற்றுமதிகளில் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த வேளையில், வேளாண்மை ஏற்றுமதிகள் சில உற்பத்திகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களுடன் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டின.

**கைத்தொழில் ஏற்றுமதிகள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 18.6 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்தக் குறைப்புடன் வருவாய்களில் பரந்த அடிப்படையிலான வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.** இலங்கையின் தனிப்பெரும் ஏற்றுமதிகளான புடவைகள் மற்றும் ஆடைகள் 2020இன் வருவாய்களில் 21.0

அட்டவணை 5.3
ஏற்றுமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2019 | | 2020 (அ) | | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | பங்கு % | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **2,461.9** | **20.6** | **2,336.2** | **23.3** | **-125.6** | **-5.1** | **6.6** |
| தேயிலை | 1,346.4 | 11.3 | 1,240.9 | 12.4 | -105.5 | -7.8 | 5.6 |
| தெங்கு | 329.5 | 2.8 | 345.2 | 3.4 | 15.7 | 4.8 | -0.8 |
| வாசனைப் பொருட்கள் | 312.5 | 2.6 | 333.5 | 3.3 | 20.9 | 6.7 | -1.1 |
| கடலுணவு | 262.5 | 2.2 | 189.8 | 1.9 | -72.6 | -27.7 | 3.8 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 120.0 | 1.0 | 134.7 | 1.3 | 14.6 | 12.2 | -0.8 |
| மரக்கறிகள் | 32.0 | 0.3 | 36.6 | 0.4 | 4.6 | 14.3 | -0.2 |
| இறப்பர் | 24.2 | 0.2 | 30.1 | 0.3 | 5.9 | 24.4 | -0.3 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 34.7 | 0.3 | 25.5 | 0.3 | -9.2 | -26.6 | 0.5 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **9,426.3** | **78.9** | **7,672.0** | **76.4** | **-1,754.3** | **-18.6** | **92.7** |
| புடவைகளும் ஆடைகளும் | 5,596.5 | 46.9 | 4,423.1 | 44.0 | -1,173.4 | -21.0 | 62.0 |
| இறப்பர் உற்பத்திகள் | 866.1 | 7.3 | 786.1 | 7.8 | -80.0 | -9.2 | 4.2 |
| உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 447.0 | 3.7 | 464.0 | 4.6 | 17.0 | 3.8 | -0.9 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 521.1 | 4.4 | 373.6 | 3.7 | -147.6 | -28.3 | 7.8 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 400.0 | 3.3 | 337.5 | 3.4 | -62.5 | -15.6 | 3.3 |
| இரத்தினம், வைரம் மற்றும் ஆபரணங்கள் | 305.7 | 2.6 | 181.5 | 1.8 | -124.3 | -40.6 | 6.6 |
| போக்குவரத்துக் கருவிகள் | 145.9 | 1.2 | 71.4 | 0.7 | -74.5 | -51.0 | 3.9 |
| தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணி | 102.9 | 0.9 | 53.9 | 0.5 | -48.9 | -47.6 | 2.6 |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 48.3 | 0.4 | 47.9 | 0.5 | -0.4 | -0.8 | 0.02 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 30.1 | 0.3 | 24.0 | 0.2 | -6.1 | -20.2 | 0.3 |
| ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் | 962.8 | 8.1 | 909.0 | 9.0 | -53.8 | -5.6 | 2.8 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **33.9** | **0.3** | **25.1** | **0.2** | **-8.8** | **-25.9** | **0.5** |
| **வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்** | **17.9** | **0.2** | **14.1** | **0.1** | **-3.8** | **-21.4** | **0.2** |
| **மொத்த ஏற்றுமதிகள் (ஆ) (இ)** | **11,940.0** | **100.0** | **10,047.4** | **100.0** | **-1,892.6** | **-15.9** | **100.0** |
| **ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **178.78** | | **185.52** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் ஏற்றுமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ஐ.அ.டொலர் செலாவணி வீதம்

*மூலங்கள்:* இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண அதிகார சபை
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி



சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. பெற்றோலிய உற்பத்தி ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள், நீர்க்கல எரிபொருள், வானூர்தி எரிபொருட்களின் வழங்கல் செய்யப்பட்ட அளவு மற்றும் விலைகளிலான குறைப்பு என்பனவற்றின் காரணமாக வீழ்ச்சியடைந்தன. கடல்வழி மற்றும் வான் போக்குவரத்துச் செயற்பாடுகளில் உலகம் முழுவதிலும் ஏற்பட்ட இடையூறுகள் இவ்வீழ்ச்சிக்குப் பங்களித்தன. எனினும், பெறுமதிகூட்டப்பட்ட தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதியின் முக்கிய காரணமாக உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை வகை வருவாய்களில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தது. மேலும், புடவைகள் மற்றும் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் பிளாத்திக்குப்பொருட்கள் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட புடவையிலான முகக்கவசம், அறுவை சிகிச்சை மற்றும் ஏனைய கையுறைகள் மற்றும் பிளாத்திக்கு ஆடைப்பொருட்கள் போன்ற தனியாள் பாதுகாப்புச் சாதனங்களின் வருவாய்கள் 2020இல் அதிகரித்தன. தனியாள் பாதுகாப்புச் சாதனங்களுடன் தொடர்பான விடயங்களில் இலங்கையினது ஏற்றுமதிகள் 2019இன் ஐ.அ.டொலர் 693 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 942 மில்லியனாகக் காணப்பட்டது.

**தேயிலை, கடலுணவு மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றிலிருந்தான வருவாய்கள் நலிவடைந்தமையினால் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் வேளாண்மை ஏற்றுமதி வருவாய்கள் 5.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் வாசனைத்திரவியங்கள், தெங்கு, சிறுவேளாண்மை உற்பத்திகள், இறப்பர் மற்றும் காய்கறிகளிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தன.** கொவிட்-19 நோய்ப்பரவலின் முதலாவது அலைக் காலத்தில் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதி இரண்டும் கணிசமாக வீழ்ச்சியடைந்தனவெனினும், ஆண்டின் பிற்பகுதியில் ஓரளவிற்கு மீட்சியடைந்தன. பெரும்பாலும், உயர்ந்த ஏற்றுமதி அளவுகளின் தூண்டுதலினால் கறுவா, மிளகு, உலர்

காய்கறிகள், பாக்கு, தேங்காயெண்ணெய் மற்றும் தும்பு மற்றும் இயற்கை இறப்பர் போன்ற வேளாண்மை ஏற்றுமதிகள் இவ்வாண்டுப்பகுதியில் வருவாய்களில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.


**கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 25.9 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன.** கனிப்பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் அம்மூலவளங்களை உயர் பெறுமதிகளைக் கூட்டும் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துகின்ற போதும் இக்கனிப்பொருள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் மிகக் குறைவாக விளங்கி 2020இன் ஏற்றுமதி வருவாய்களில் 0.2 சதவீதத்தினை மட்டுமே கொண்டிருந்தன. இதனை அங்கீரித்து அரசாங்கம் கனிப்பொருள் ஏற்றுமதிகளை தாழ்ந்த பெறுமதிகூட்டல் வடிவத்தில் ஏற்றுமதி செய்வதனை ஊக்குவிக்காது, உள்ளூர் கனிப்பொருட்களைப் பயன்படுத்தி பொருட்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதனை ஊக்குவிப்பதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இறக்குமதிச் செயலாற்றம்

**இடைநிலைப்பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் மற்றும் உணவல்லா நுகர்வுப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் இறக்குமதிகள் மீதான செலவினம் ரூ.16,055 மில்லியனுக்கு 19.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சி, அத்தியாவசியமல்லாத பொருட்களின் இறக்குமதி மீது அரசினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், உலகளாவிய சந்தையில் குறைவடைந்த எண்ணெய் விலைகள் மற்றும் நாட்டில் பொருளாதார நடவடிக்கைகள் குறைவடைந்தமையின் காரணமாக இடைநிலைப்பொருட்களின் இறக்குமதிகளில் ஏற்பட்ட குறைப்பு என்பனவற்றினதும் உலகளாவிய வழங்கல் நிலையில் ஏற்பட்ட இடையூறுகளினதும் விளைவாகும்.

வரைபடம் 5.5

இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2020




*மூலம்* : இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**2020இல் இடைநிலைப்பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 9,076 மில்லியனுக்கு 20.2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** இடைநிலைப்பொருட்களிடையே மிகப்பெரும் இறக்குமதி விடயமாக விளங்கும் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் மீதான செலவினம் 2019இன் ஐ.அ.டொலர் 3,677 மில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 2,325 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். ஆய்வுக்குரிய ஆண்டில் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றொலியத்தின் அளவுகளும் கூட முறையே 9.3 சதவீதத்தினாலும் 15.0 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, நிலக்கரியின் இறக்குமதி அளவு 2020இல் 8.8 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மெ.தொன்னொன்றிற்கான சராசரி விலை 2019இல் ஐ.அ.டொலர் 89.79 இலிருந்து ஐ.அ.டொலர் 83.60 இற்கு வீழ்ச்சியடைந்து, நிலக்கரியின் இறக்குமதிப் பெறுமதியில் 1.3 சதவீதம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட வழிவகுத்தது. 2020இல் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் 19.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு ஆடைகளின் உற்பத்தி அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதேபோன்று உலகளாவிய கொவிட்-19 பரவல் தீவிரமடைந்த நேரத்தில் புடவை மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் காணப்பட்ட இடர்ப்பாடுகளும் காரணங்களாக அமைந்தன. மற்றைய இடைநிலைப்பொருட்களிடையே, 2020இல் இறக்குமதிச் செலவினத்தில் பரந்த அடிப்படையில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட போதும் கோதுமை, வளமாக்கி மற்றும் வேளாண்மை உள்ளீடுகள் போன்ற சில விடயங்கள் மீதான செலவினம் அதிகரித்தது.

5

**2020இல் முதலீட்டுப்பொருட்கள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 3,563 மில்லியனுக்கு 22.6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.** 2020இல் முதலீட்டுப்பொருட்களின் அனைத்து மூன்று முக்கிய வகைகளினதும் அதாவது பொறிகள் மற்றும் சாதனங்கள், கட்டட மூலப்பொருட்கள் மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பனவற்றின் மீதான இறக்குமதிச் செலவினம் 2019 உடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தது. இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அதேபோன்று உலகளாவிய மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரங்களில் நோய்த்தொற்றினால் ஏற்பட்ட ஏனைய தாக்கங்கள் இவ்விளைவிற்குக் காரணமாயின. இவ்வாண்டுப்பகுதியில், முதலீட்டுப்பொருட்களின் மேற்குறிப்பிட்ட வகைகளின் கீழுள்ள பெரும்பாலும் அனைத்துப் பொருட்கள் மீதுமான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்த போதும், பொறிகள் மற்றும் சாதனங்களின் உதிரிப்பாகங்கள், பொறிகள் மற்றும் எந்திரங்களின் துணைக் கருவிகள், நீராவி எந்திரங்கள், வேளாண்மை உழுபொறிகள், வேளாண்மைக்கான பொறிகள் மற்றும் கணனிகள் என்பனவற்றில் அதிகரிப்புக்கள் பதிவுசெய்யப்பட்டன.

### அட்டவணை 5.4
### இறக்குமதிகளின் உள்ளடக்கம்

| வகை | 2019 பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2019 பங்கு % | 2020 (அ) பெறுமதி ஐ.அ.டொலர் மில்லியன் | 2020 (அ) பங்கு % | பெறுமதியின் மாற்றம் ஐ.அ.டொலர் மில்லியன் | ஆண்டுக்கு ஆண்டு மாற்றம் % | மாற்றத்திற்கான பங்களிப்பு % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **3,956.5** | **19.8** | **3,401.7** | **21.2** | **-554.9** | **-14.0** | **14.3** |
| உணவும் குடிபானங்களும் | 1,426.9 | 7.2 | 1,554.4 | 9.7 | 127.5 | 8.9 | -3.3 |
| அரிசி | 12.8 | 0.1 | 10.5 | 0.1 | -2.3 | -17.7 | 0.1 |
| சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் | 201.2 | 1.0 | 277.1 | 1.7 | 75.9 | 37.7 | -2.0 |
| பால் உற்பத்திகள் | 311.9 | 1.6 | 333.8 | 2.1 | 21.9 | 7.0 | -0.6 |
| பருப்பு வகை | 79.9 | 0.4 | 96.9 | 0.6 | 17.0 | 21.3 | -0.4 |
| ஏனையவை | 821.2 | 4.1 | 836.0 | 5.2 | 14.9 | 1.8 | -0.4 |
| உணவல்லாத நுகர்வுப் பொருட்கள் | 2,529.6 | 12.7 | 1,847.3 | 11.5 | -682.3 | -27.0 | 17.6 |
| வாகனங்கள் | 815.7 | 4.1 | 282.9 | 1.8 | -532.8 | -65.3 | 13.7 |
| மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 552.6 | 2.8 | 595.5 | 3.7 | 42.9 | 7.8 | -1.1 |
| வீட்டுப் பாவனைப் பொருட்கள் | 206.6 | 1.0 | 174.2 | 1.1 | -32.4 | -15.7 | 0.8 |
| புடவைகள் மற்றும் துணைப் பொருட்கள் | 275.1 | 1.4 | 200.7 | 1.2 | -74.5 | -27.1 | 1.9 |
| ஏனையவை | 679.6 | 3.4 | 594.0 | 3.7 | -85.5 | -12.6 | 2.2 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **11,369.6** | **57.0** | **9,076.5** | **56.5** | **-2,293.1** | **-20.2** | **59.1** |
| எரிபொருள் | 3,891.6 | 19.5 | 2,542.6 | 15.8 | -1,349.0 | -34.7 | 34.8 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 2,909.4 | 14.6 | 2,335.1 | 14.5 | -574.3 | -19.7 | 14.8 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 201.4 | 1.0 | 117.2 | 0.7 | -84.2 | -41.8 | 2.2 |
| இரசாயன உற்பத்திகள் | 831.5 | 4.2 | 831.5 | 5.2 | 0.03 | 0.004 | -0.001 |
| கோதுமை மற்றும் சோளம் | 346.4 | 1.7 | 384.4 | 2.4 | 38.0 | 11.0 | -1.0 |
| வளமாக்கி | 221.4 | 1.1 | 258.9 | 1.6 | 37.5 | 16.9 | -1.0 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 2,967.9 | 14.9 | 2,606.8 | 16.2 | -361.1 | -12.2 | 9.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **4,602.6** | **23.1** | **3,563.2** | **22.2** | **-1,039.4** | **-22.6** | **26.8** |
| பொறியும் கருவியும் | 2,489.7 | 12.5 | 2,176.1 | 13.6 | -313.6 | -12.6 | 8.1 |
| கட்டடப் பொருட்கள் | 1,508.7 | 7.6 | 1,035.6 | 6.5 | -473.1 | -31.4 | 12.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 596.6 | 3.0 | 348.3 | 2.2 | -248.3 | -41.6 | 6.4 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 7.6 | 0.04 | 3.2 | 0.02 | -4.4 | -57.8 | 0.1 |
| **வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **8.3** | **0.04** | **14.0** | **0.1** | **5.7** | **68.8** | **-0.1** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ) (இ)** | **19,937.1** | **100.0** | **16,055.4** | **100.0** | **-3,881.7** | **-19.5** | **100.0** |
| **ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் (ஈ)** | **178.78** | | **185.52** | | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) மீள் இறக்குமதிகள் நீங்கலாக
(இ) சீராக்கப்பட்டது
(ஈ) ரூபா/ ஐ.அ.டொலர் நாணயமாற்று வீதம்

மூலங்கள் : இலங்கை பெற்றோலியக்கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி. பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

5

**மருந்துகள் மற்றும் மருந்தாக்கற்பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் தவிர்ந்த, உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினம் பரந்த அடிப்படையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்திருக்கிறது.** இதற்கமைய, 2020இல் உணவல்லா நுகர்வுப்பொருட்கள் வகையில் ஏற்பட்ட வீழ்ச்சி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 27.0 சதவீதமாக விளங்கியதுடன் வீழ்ச்சியில் பெரும்பங்கு தனியாள் பயன்பாட்டிலுள்ள உந்து ஊர்திகளிலிருந்தே தோன்றியது. இவ்வாண்டுப்பகுதியில் அத்தியாவசியமல்லாத இறக்குமதிகள் மீது அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மேலே குறிப்பிடப்பட்ட ஏனைய காரணிகளுடன் சேர்ந்து பெரும்பாலான உணவல்லா நுகர்வுப்பொருட்கள் மீதான செலவினத்தில் வீழ்ச்சியைத் தோற்றுவித்தன.

**2020இல் இலங்கையின் உணவு மற்றும் குடிபானங்களின் இறக்குமதி மீதான செலவு ஐ.அ.டொலர் 1,554 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 8.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியது.** பெறுமதியில் பெரும் அதிகரிப்பினைப் பதிவுசெய்த மூன்று வகைகளாக எண்ணெய் மற்றும் கொழுப்பு (தேங்காயெண்ணெய் இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணம்); சீனி (முக்கியமாக ஆண்டின் பின்னரைப் பகுதியில்); பால் உற்பத்திகள் (பால்மா மீதான இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்) என்பன காணப்பட்டன. தேங்காயெண்ணெய் நுகர்வுப்பொருளாக வகைப்படுத்தப்பட்டுள்ள போதும் இது இடைநிலைப்பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில், காய்கறிகளின் இறக்குமதி மீதான செலவினம் அதிகரித்தமைக்கு, முக்கியமாக பருப்பு வகை, உள்ளி மற்றும் வெங்காயம், கடலை வகை மற்றும் உருளைக்கிழங்கு என்பனவற்றில் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். வாசனைத்திரவியங்கள் மீதான செலவினம் அதிகரித்தமைக்கு மிளகாய், கொத்தமல்லி, சீரகம், வெந்தயம் மற்றும் வனிலா என்பன மீதான செலவினம் முக்கிய காரணமாக அமைந்த வேளையில் மஞ்சள் மற்றும் மிளகு மீதான செலவினம்

அட்டவணை 5.5
முக்கிய இறக்குமதிகளின் அளவு

மெ.தொ '000

| விடயம் | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 (அ) |
|---|---|---|---|---|---|
| **சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் (ஆ)** | **3,885** | **4,895** | **4,959** | **4,740** | **4,028** |
| 1ஆம் காலாண்டு | 830 | 1,275 | 1,382 | 1,199 | 1,249 |
| 2ஆம் காலாண்டு | 1,163 | 1,123 | 1,207 | 1,206 | 678 |
| 3ஆம் காலாண்டு | 749 | 1,336 | 1,317 | 1,211 | 1,123 |
| 4ஆம் காலாண்டு | 1,142 | 1,161 | 1,054 | 1,124 | 978 |
| **மசகு எண்ணெய் (ஆ)** | **1,685** | **1,591** | **1,674** | **1,842** | **1,667** |
| 1ஆம் காலாண்டு | 372 | 282 | 283 | 461 | 464 |
| 2ஆம் காலாண்டு | 456 | 376 | 459 | 460 | 265 |
| 3ஆம் காலாண்டு | 384 | 464 | 461 | 461 | 568 |
| 4ஆம் காலாண்டு | 473 | 469 | 471 | 460 | 370 |
| **கோதுமை** | **948** | **1,250** | **1,297** | **1,159** | **1,404** |
| 1ஆம் காலாண்டு | 171 | 291 | 412 | 164 | 272 |
| 2ஆம் காலாண்டு | 326 | 334 | 329 | 318 | 285 |
| 3ஆம் காலாண்டு | 271 | 359 | 285 | 292 | 498 |
| 4ஆம் காலாண்டு | 179 | 265 | 271 | 385 | 348 |
| **வளமாக்கி** | **527** | **399** | **861** | **707** | **952** |
| 1ஆம் காலாண்டு | 139 | 78 | 256 | 148 | 88 |
| 2ஆம் காலாண்டு | 135 | 73 | 154 | 142 | 294 |
| 3ஆம் காலாண்டு | 126 | 129 | 225 | 238 | 126 |
| 4ஆம் காலாண்டு | 127 | 119 | 226 | 179 | 444 |
| **சீனி** | **651** | **498** | **645** | **556** | **683** |
| 1ஆம் காலாண்டு | 147 | 108 | 205 | 140 | 193 |
| 2ஆம் காலாண்டு | 144 | 158 | 166 | 153 | 108 |
| 3ஆம் காலாண்டு | 179 | 101 | 119 | 100 | 209 |
| 4ஆம் காலாண்டு | 181 | 132 | 154 | 164 | 172 |
| **அரிசி** | **30** | **748** | **249** | **24** | **16** |
| 1ஆம் காலாண்டு | 6 | 259 | 203 | 8 | 8 |
| 2ஆம் காலாண்டு | 9 | 79 | 37 | 3 | 2 |
| 3ஆம் காலாண்டு | 6 | 160 | 2 | 5 | 2 |
| 4ஆம் காலாண்டு | 8 | 250 | 7 | 8 | 4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
லங்கா ஐ.ஓ.சி பி.எல்.சி
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி


வீழ்ச்சியடைந்தது. கடலுணவு மற்றும் குடிபானங்கள் மீதான இறக்குமதிச் செலவினம் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்தது.

## வர்த்தக மாற்று விகிதம்

**இறக்குமதி விலைகளின் நியதிகளில் இலங்கையின் ஏற்றுமதி விலைகளை எடுத்துக்காட்டும் வர்த்தக மாற்று விகிதம் 2020இல் மேம்பட்டது.** 2020இல் வர்த்தக மாற்று விகிதம் 106.5 சுட்டெண் புள்ளிகளாக அமைந்து 2019இல் பதிவுசெய்யப்பட்ட 103.9 புள்ளிகளுடன் ஒப்பிடுகையில் 2.5 சதவீதத்தினால் மேம்பட்டது. இம்முன்னேற்றம், இவ்வாண்டுப்பகுதியில் இறக்குமதி விலைச் சுட்டெண் 8.2 சுட்டெண் புள்ளியினால் அல்லது 9.1 சதவீதத்தினாலும் (மற்றைய விடயங்களுடன் மசகெண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியத்தின் விலைகளில் ஏற்பட்ட குறைப்பே பெருமளவிற்குத் தூண்டுதலாக விளங்கியது) ஏற்றுமதி விலைச் சுட்டெண் 6.4 சுட்டெண் புள்ளியினால் அல்லது 6.8 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தமையின் விளைவேயாகும்.

**வேளாண்மை ஏற்றுமதிகளுக்கான விலைச் சுட்டெண்ணில் மேம்பாடுகள் காணப்பட்ட போதும் கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான விலைச் சுட்டெண் வீழ்ச்சிடைந்தமையின் காரணமாக 2020இல் ஒட்டுமொத்த ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைந்தது.** இவ்வாண்டுப்பகுதியில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் விலைச் சுட்டெண் 8.6 சுட்டெண் புள்ளிகளினால் அல்லது 9.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு பெற்றோலிய ஏற்றுமதிகளுக்கான (நீர்க்கல எரிபொருள், வான் எரிபொருள் மற்றும் ஏனைய பெற்றோலிய உற்பத்திகள்) விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக விளங்கியது. இதற்கு 2019 உடன் ஒப்பிடுகையில் 2020இல் தாழ்ந்த உலகளாவிய எண்ணெய் விலைகள் காரணமாக விளங்கின. மேலும், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள்; போக்குவரத்துச் சாதனங்கள்; மரம் மற்றும் தாள் உற்பத்திகள்; தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள்; மட்பாண்ட உற்பத்திகள்; மற்றும் விலங்குத்தீன் என்பன இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்த ஏனைய வகைகளாகக் காணப்பட்டன. 2020இல் மிதமான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்த ஒரு சில முக்கிய ஏற்றுமதிகளாக புடவைகள் மற்றும் ஆடைகள்; இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள்; மற்றும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை போன்றன காணப்பட்டன. 2020இல் வேளாண்மை ஏற்றுமதிகளுக்கான விலைச் சுட்டெண் 2.7 சுட்டெண் புள்ளியினால் அல்லது 2.5 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு தேயிலை, தெங்கு, வாசனைத்திரவியங்கள், கடலுணவு மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகளுக்கான விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே தூண்டுதலாக அமைந்தன. எனினும், தயாரிக்கப்படாத புகையிலை மற்றும் காய்கறிகளுக்கான விலைச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, 2020இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளுக்கான விலைச் சுட்டெண் 8.7 சுட்டெண் புள்ளியினால் அல்லது 6.1 சதவீதத்தினால் அதிகரித்தன.

வரைபடம் 5.6
வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

5

அட்டவணை 5.6
வர்த்தக சுட்டெண்கள் (அ)

2010 = 100

| வகை | பெறுமதிச் சுட்டெண் | | | அளவுச் சுட்டெண் | | | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2019 | 2020 (ஆ) | ஆண்டுக் காண்டு மாற்றம் % | 2019 | 2020 (ஆ) | ஆண்டுக் காண்டு மாற்றம் % | 2019 | 2020 (ஆ) | ஆண்டுக் காண்டுமாற்றம் % |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **106.8** | **101.3** | **-5.1** | **97.7** | **90.5** | **-7.4** | **109.3** | **112.0** | **2.5** |
| தேயிலை | 93.5 | 86.2 | -7.8 | 88.8 | 80.7 | -9.2 | 105.3 | 106.8 | 1.5 |
| இறப்பர் | 14.0 | 17.4 | 24.4 | 24.0 | 29.4 | 22.7 | 58.3 | 59.1 | 1.4 |
| தெங்கு | 198.9 | 208.4 | 4.8 | 177.6 | 168.0 | -5.4 | 112.0 | 124.0 | 10.7 |
| வாசனைத்திரவியங்கள் | 150.9 | 161.0 | 6.7 | 115.0 | 114.5 | -0.4 | 131.2 | 140.6 | 7.1 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 168.1 | 188.6 | 12.2 | 163.0 | 173.1 | 6.2 | 103.1 | 108.9 | 5.6 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **154.7** | **125.9** | **-18.6** | **170.8** | **153.5** | **-10.1** | **90.6** | **82.1** | **-9.4** |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 166.9 | 131.9 | -21.0 | 143.2 | 111.5 | -22.1 | 116.6 | 118.3 | 1.5 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 198.0 | 141.9 | -28.3 | 246.7 | 238.5 | -3.3 | 80.3 | 59.5 | -25.9 |
| இறப்பர் உற்பத்திகள் | 155.6 | 141.2 | -9.2 | 109.4 | 100.0 | -8.7 | 142.2 | 141.3 | -0.6 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **139.9** | **103.6** | **-25.9** | **98.2** | **68.6** | **-30.2** | **142.4** | **151.2** | **6.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **138.5** | **116.5** | **-15.9** | **147.2** | **132.9** | **-9.7** | **94.1** | **87.7** | **-6.8** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **159.9** | **137.5** | **-14.0** | **145.4** | **128.0** | **-12.0** | **110.0** | **107.4** | **-2.3** |
| உணவு மற்றும் குடிபானங்கள் | 107.9 | 117.5 | 8.9 | 120.5 | 127.4 | 5.7 | 89.5 | 92.2 | 3.0 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 219.7 | 160.4 | -27.0 | 174.0 | 128.7 | -26.0 | 126.3 | 124.7 | -1.3 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **141.3** | **112.8** | **-20.2** | **156.0** | **140.2** | **-10.2** | **90.5** | **80.5** | **-11.1** |
| எரிபொருள் | 128.0 | 83.6 | -34.7 | 151.8 | 133.1 | -12.3 | 84.3 | 62.8 | -25.5 |
| வளமாக்கி | 92.2 | 107.8 | 16.9 | 119.5 | 160.2 | 34.1 | 77.1 | 67.3 | -12.8 |
| இரசாயன உற்பத்திகள் | 159.9 | 159.9 | 0.004 | 155.7 | 157.9 | 1.4 | 102.7 | 101.3 | -1.4 |
| கோதுமை மற்றும் சோளம் | 130.5 | 144.8 | 11.0 | 127.5 | 138.9 | 8.9 | 102.3 | 104.3 | 1.9 |
| புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் | 160.8 | 129.1 | -19.7 | 153.9 | 126.8 | -17.6 | 104.5 | 101.8 | -2.6 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 144.9 | 127.7 | -11.9 | 158.5 | 148.9 | -6.1 | 91.4 | 85.8 | -6.2 |
| வைரங்கள், அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் | 53.3 | 31.0 | -41.8 | 66.5 | 36.5 | -45.1 | 80.2 | 85.1 | 6.0 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **167.1** | **129.3** | **-22.6** | **211.5** | **183.4** | **-13.3** | **79.0** | **70.5** | **-10.7** |
| கட்டடப் பொருட்கள் | 183.6 | 126.0 | -31.4 | 215.1 | 147.7 | -31.4 | 85.3 | 85.4 | 0.01 |
| போக்குவரத்துக் கருவி | 100.7 | 58.8 | -41.6 | 93.7 | 50.4 | -46.2 | 107.5 | 116.6 | 8.5 |
| பொறி மற்றும் கருவி | 186.1 | 162.7 | -12.6 | 261.5 | 264.5 | 1.1 | 71.2 | 61.5 | -13.6 |
| **மொத்த இறக்குமதிகள்** | **148.7** | **119.7** | **-19.5** | **164.2** | **145.5** | **-11.4** | **90.5** | **82.3** | **-9.1** |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | | | | | | **103.9** | **106.5** | **2.5** |

(அ) ஐ.அ.டொலரின் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானது

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

5


**இடைநிலை, முதலீட்டு மற்றும் நுகர்வுப்பொருட்களுக்கான விலைச்சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக, 2020இல் ஒட்டுமொத்த இறக்குமதி விலைச்சுட்டெண் வீழ்ச்சியடைந்தது.** இடைநிலைப்பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் 10.1 சுட்டெண் புள்ளியினால் அல்லது 11.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு எரிபொருள், வளமாக்கி, பிளாத்திக்கு மற்றும் அவற்றுடன் தொடர்பான பொருட்கள் உள்ளிட்ட துணை வகைகளில் பெரும்பாலானவற்றின் விலைகளில் பதிவுசெய்யப்பட்ட விலை வீழ்ச்சிகளே காரணமாகும். எனினும், 2020இல் கோதுமை மற்றும் சோளம்; வைரங்கள், பெறுமதிக்க கற்கள் மற்றும் உலோகங்கள்; மற்றும் உணவு தயாரிப்புக்களின் விலைச் சுட்டெண்கள் அதிகரித்தன. முதலீட்டுப்பொருட்களின் விலைச் சுட்டெண் 2020இல் 8.5 சுட்டெண் புள்ளியினால் அல்லது 10.7 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு பொறிகள் மற்றும் சாதனங்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும். எனினும், போக்குவரத்துச் சாதனங்களின் விலைச் சுட்டெண் அதிகரித்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில், நுகர்வுப்பொருட்களின் இறக்குமதி விலைச் சுட்டெண் 2.6 சுட்டெண் புள்ளியினால் அல்லது 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, உணவு மற்றும் குடிபானங்களின் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பினை விஞ்சிக் காணப்பட்ட உணவல்லா நுகர்வுப்பொருட்களுக்கான விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். 2020இல் உணவல்லா நுகர்வுப்பொருள் வகைக்குள் வீட்டு உபயோகப்பொருட்கள் மற்றும் தளபாடப்பொருட்கள் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் தவிர பெரும்பாலும் அனைத்துத் துணை வகைகளும் விலைச் சுட்டெண்களில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில், உணவு மற்றும் குடிபானங்களின் விலைச் சுட்டெண் 2.7 சுட்டெண் புள்ளிகளினால் அல்லது 3.0 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வாசனைத்திரவியங்கள், சீனி, இனிப்பு; காய்கறிகள், எண்ணெய் மற்றும் கொழுப்பு; மற்றும் கடலுணவு என்பன உள்ளிட்ட துணை வகைகளுக்கான பெரும்பாலான சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். எனினும், குடிபானங்களுக்கான இறக்குமதி விலைச் சுட்டெண் இவ்வாண்டுக் காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தது.

**2020இல் வர்த்தக அளவின் குறைப்பு ஏற்றுமதி வருவாய்கள் மற்றும் இறக்குமதிச் செலவினம் ஆகிய இரண்டினையும் கணிசமானளவிற்குக் குறைவடையச் செய்தது.** ஏற்றுமதிகளின் அனைத்து மூன்று முக்கிய வகைகளுக்குமான அதாவது கைத்தொழில், வேளாண்மை மற்றும் கனிப்பொருட்களுக்கான ஏற்றுமதி அளவுச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்த வேளையில் இறக்குமதிகளின் மூன்று முக்கிய வகைகளுக்கான அதாவது நுகர்வோர், இடைநிலை மற்றும் முதலீட்டுப்பொருட்களுக்கான இறக்குமதி அளவுச் சுட்டெண்களும் வீழ்ச்சியடைந்தன.

## வர்த்தகத்தின் போக்கு

**2020ஆம் ஆண்டுப்பகுதியில் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டிலும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் உலகம் முழுவதிலும் வழங்கல் சங்கிலிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் காணப்பட்டமைக்கிடையிலும் முன்னைய ஆண்டிலிருந்து இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்கள் பரந்தளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டனர்.** பெறுமதி நியதிகளில் 2020இல் சீனா இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர் என்ற ரீதியில் இந்தியாவினை விஞ்சியதுடன் அதனையடுத்து ஐக்கிய அமெரிக்காவும் காணப்பட்ட வேளையில், இம்மூன்று நாடுகளும் இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் (ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இரண்டும்) ஏறத்தாழ 40 சதவீதத்திற்குப் பங்களித்தன. நோய்த்தொற்றின் தாக்கத்தினால் சீனா, இந்தியா மற்றும் ஐக்கிய அமெரிக்கா என்பனவற்றுடனான மொத்த வர்த்தகம் 2019இன் ஐ.அ.டொலர் 12.6 பில்லியனிலிருந்து பரிசீலனைக்குரிய காலப்பகுதியில் ஐ.அ.டொலர் 10.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. 2020ஆம் ஆண்டில் மற்றைய முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான மொத்த வர்த்தகமும் வீழ்ச்சியடைந்த வேளையில் சில சிறிய வர்த்தகப் பங்காளர்களான ஓமான், குவைத், தென்னாபிரிக்கா போன்றவற்றுடனான மொத்த வர்த்தகம் மேம்பட்டது. 2020இல் நாடுகள் அடிப்படையிலான வர்த்தக மீதிகளைப் பரிசீலனையில் கொள்கையில், குறிப்பிடத்தக்க வர்த்தக மீதிகள் ஐக்கிய அமெரிக்கா (ஐ.அ.டொலர் 2 பில்லியன்), ஐக்கிய இராச்சியம் (ஐ.அ.டொலர் 698 மில்லியன்), ஜேர்மனி (ஐ.அ.டொலர் 254 மில்லியன்) அதேபோன்று பெல்ஜியம், நெதர்லாந்து மற்றும் இத்தாலி போன்ற நாடுகளுடன் பதிவுசெய்யப்பட்டன. இலங்கை குறிப்பிடத்தக்க வர்த்தகப் பற்றாக்குறைகளை சீனா (ஐ.அ.டொலர் 3.4 பில்லியன்), இந்தியா (ஐ.அ.டொலர் 2.5 பில்லியன்), ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (ஐ.அ.டொலர் 845 மில்லியன்), அவற்றினைத் தொடர்ந்து சிங்கப்பூர், மலேசியா மற்றும் யப்பான் போன்ற ஆசிய நாடுகளுடன் பதிவுசெய்தது. இது ஆசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுடனான வர்த்தக நிலுவையை மேம்படுத்துவதற்காக ஏற்றுமதி வருவாய்களை அதிகரிப்பதற்கும் இறக்குமதிச் செலவினத்தைக் குறைப்பதற்கும்

வரைபடம் 5.7
நாடுகள் ரீதியான வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ.மில்)




மூலம் : இலங்கை மத்திய வங்கி

முனைப்புடன் கூடிய வழிமுறைகளின் தேவைப்பாட்டினைக் காட்டுகின்றது.


**2020இல் இலங்கை ஏற்றுமதிகளுக்கான முக்கிய சேரிடங்களாக ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் தொடர்ந்தும் விளங்கின.** ஐக்கிய அமெரிக்கா இலங்கை ஏற்றுமதிகளின் தனிப்பெரும் வாங்குநராகத் தொடர்ந்தும் விளங்கி 2020இல் ஏற்றுமதிகளில் ஐ.அ.டொலர் 2.5 பில்லியனுக்கும் கூடுதலான அளவினைக் கொண்டிருந்தது. இது மொத்த ஏற்றுமதிகளில் 24.9 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் (9.0 சதவீதம்) இந்தியாவும் (6.0 சதவீதம்) ஜேர்மனியும் (5.7 சதவீதம்) மற்றும் இத்தாலியும் (4.5 சதவீதம்) காணப்பட்டன. மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கையின் முதல் பத்து ஏற்றுமதிச் சேரிடங்கள் உட்பட பெரும்பாலான நாடுகளுடன் தொடர்பான ஏற்றுமதிகள் 2020இல் வீழ்ச்சியடைந்தன. எனினும், பல சிறிய ஏற்றுமதி சேரிடங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் இவ்வாண்டுப்பகுதியில் சிறிதளவு அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் முக்கியமாக ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் (முகக் கவசங்கள் போன்றவை), உணவு, குடிபானம் மற்றும் புகையிலை மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பனவற்றின் பேரில் காணப்பட்டன. 2019 உடன் ஒப்பிடுகையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 700 மில்லியன் கொண்ட வீழ்ச்சி பதிவுசெய்யப்பட்ட போதும் ஐக்கிய அமெரிக்கா இலங்கைக்கான தனிப்பெரும் ஆடை ஏற்றுமதிச் சேரிடமாகத் தொடர்ந்தும் விளங்கி 2020இன் மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 42 சதவீதத்திற்கு வகைகூறியது. 2020இல் ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் முக்கியமாக ஆடைகள் (மொத்த ஆடை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 14 சதவீதம்), பிளாத்திக்குகள் மற்றும் அதன் பொருட்கள் (அதாவது பிளாத்திக்கிலான ஆடைப்பொருட்கள்),

5

தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள், இறப்பர் உற்பத்திகள் மற்றும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் விலங்குத்தீன், வாசனைத்திரவியங்கள், புடவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் சிறுவேளாண்மை உற்பத்திகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, ஜேர்மனி மற்றும் இத்தாலிக்கான ஏற்றுமதிகளில் ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை மற்றும் கடலுணவு என்பன முனைப்புப் பெற்றிருந்தன. இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான முனைப்புமிக்க பிராந்தியமாக விளங்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான (ஐக்கிய இராச்சியம் உட்பட) ஏற்றுமதிகள் 2020இன் மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 32 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் முக்கியமாக அது ஆடைகளை (மொத்த ஆடை ஏற்றுமதிகளில் 44 சதவீதம்) உள்ளடக்கியிருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட ஏனைய முக்கிய விடயங்களாக இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானம் மற்றும் புகையிலை, தேயிலை பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் மற்றும் கடலுணவு என்பன காணப்பட்டன. இவற்றுள் பெரும்பாலானவை ஐரோப்பிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் ூ இனூடாக ஏற்றுமதி செய்யப்பட்டன. 2020இல், மத்திய கிழக்கு மற்றும் ருஷியாவை முதன்மை நாடாகக் கொண்ட பொதுநலவாய சுதந்திர நாடுகள் இலங்கைக்கான முக்கிய ஏற்றுமதி சேரிடங்களாக விளங்கி, நாட்டின் மொத்த தேயிலை ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 60 சதவீதத்திற்குப் பங்களித்தன. ஒன்றாக நோக்குகையில், 2020இல் ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் ஏறத்தாழ 57 சதவீதத்திற்கு வகைகூறி இலங்கையின் ஏற்றுமதித் துறையின் சந்தை போதுமானளவிற்குப் பன்முகப்படுத்தப்பட்டிராமையினைப் பிரதிபலிக்கிறது.


**2020இல் ஆசிய பிராந்தியத்திலுள்ள அயல்நாடுகள் இலங்கைக்கான இறக்குமதிகளின் முக்கிய மூலங்களாகத் தொடர்ந்தும் விளங்கின.** சீனா தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாகவும் இறக்குமதிகளின் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கி 2020இன் இறக்குமதிகளில் ஐ.அ.டொலர் 3.5 பில்லியனுக்கும் கூடுதலான அளவைப் பதிவுசெய்ததுடன் மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 22 சதவீதப் பங்கினையும் கொண்டிருந்தது. இதனை அடுத்து இந்தியாவும் (19.2 சதவீதம்), ஐக்கிய அரபு எமிறேட்சும் (6.4 சதவீதம்), சிங்கப்பூர் (4.3 சதவீதம்) மற்றும் மலேசியா (3.8 சதவீதம்) காணப்பட்டன.

வரைபடம் 5.8
நாடுகளின்படி ஏற்றுமதிகள்




*மூலம் : இலங்கைச் சுங்கம்*

வரைபடம் 5.9
நாடுகளின்படி இறக்குமதிகள்




*மூலம் : இலங்கைச் சுங்கம்*

2020இல் மொத்த இறக்குமதிச் செலவினத்தில் காணப்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் இலங்கையின் முதல் பத்து இறக்குமதி மூலங்கள் உட்பட பெரும்பாலான இறக்குமதி மூலங்களுடன் தொடர்பான செலவினம் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் மீதான (செல்லிடத் தொலைபேசிகள் போன்றவை) செலவினம் அதிகரித்த போதிலும் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள், பொறிகள் மற்றும் கருவிகள், கட்டடப்பொருட்கள் மற்றும் இரசாயனப்பொருட்கள் போன்ற சீனாவிலிருந்தான மிக முக்கியமான இறக்குமதி விடயங்கள் மீதான செலவினம் 2020இல் வீழ்ச்சியடைந்தன. இதேபோன்று, இந்தியாவிலிருந்தான இறக்குமதிகளான மருந்து மற்றும் மருந்தாக்கற்பொருட்கள்; சீனி மற்றும் இனிப்புப்பொருட்கள் மீதான செலவினம் அதிகரித்த போதிலும் புடவைகள் மற்றும் புடவைப்பொருட்கள்; கட்டடப்பொருட்கள்; பொறிகள் மற்றும் சாதனங்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தன. 2020இல் ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவிலிருந்தான முக்கிய இறக்குமதி விடயமாக பெற்றோலியம் காணப்பட்டது. ஐக்கிய அரபு எமிரேட்சிலிருந்தான ஏனைய முக்கிய இறக்குமதி விடயங்களாக அடிப்படை உலோகம், கடலுணவு மற்றும் கனிப்பொருள் உற்பத்திகள் காணப்பட்ட வேளையில் சிங்கப்பூரிலிருந்து பொறிகள் மற்றும் கருவிகள் இரசாயன உற்பத்திகள், பிளாத்திக்குகள் மற்றும் அதன் பொருட்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்ட முக்கிய பொருட்களாகக் காணப்பட்டன. உணவு தயாரிப்புக்கள், (தாவர எண்ணெய் போன்றவை) இரசாயன உற்பத்திகள், பொறிகள் மற்றும் சாதனங்கள், கட்டடப்பொருட்கள் மற்றும் எண்ணெய், கொழுப்பு (தேங்காய் எண்ணெய் போன்றவை) என்பன மலேசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்றைய முக்கிய விடயங்களாகக் காணப்பட்டன. தற்போது நடைமுறையிலுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் காரணமாக உந்து ஊர்திகளின் இறக்குமதி குறைவடைந்தமையின் முக்கிய விளைவாக இறக்குமதி மூலமாக 2020இல் 5ஆவது இடத்திலிருந்த யப்பான் 2020இல் 6ஆவது இடத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைகள், அபிவிருத்திகள் மற்றும் நிறுவன ரீதியான ஆதரவு

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று உலகளாவிய பொருளாதாரத்திற்கும் உலக வர்த்தகத்திற்கும் முன்னெப்பொழுதுமில்லாத இடையூறுகளைத் தோற்றுவித்தமையானது இம்மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை எடுப்பதற்கு அரசாங்கத்தினைத் தூண்டின.** அவசர தணிப்பு வழிமுறைகளை எடுக்கின்ற அதேவேளையில், அரசாங்கம், இறக்குமதிகளுக்கான மாற்றீடுகளையும் ஏற்றுமதிகளையும் ஊக்குவிக்கக்கூடியதுமான அபிவிருத்திகளூடாக உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஆதரவளிக்கின்ற வர்த்தகக் கொள்கையின் மீது கவனம் செலுத்தியது. 2020 ஏப்பிறலில் அரசாங்கம் தீர்வை நிர்ணயக் குழுவொன்றினை நிறுவியது. இதற்கு பன்னாட்டு வர்த்தகத்துடன் தொடர்பான முக்கிய ஆர்வலர்களை உள்ளடக்கியிருந்ததுடன் அரசாங்கத்தின் கொள்கைக் கட்டமைப்பில் அடையாளம் காணப்பட்ட முன்னுரிமை விடயங்களுடன் இசைந்து செல்லும் விதத்தில் வர்த்தகம் மற்றும் தீர்வைக் கொள்கைகளை வடிவமைக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. 2020இன் முதலரைப்பகுதியில் காணப்பட்ட தீவிரமான பொருளாதார நிலைமைகள் அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் உட்பட, முன்னெப்பொழுதுமில்லாத வழிமுறைகளை எடுப்பதற்கு வழிவகுத்தன. ஒரு தற்காலிக வழிமுறையாக அத்தியாவசியமல்லாத பொருட்களின் இறக்குமதி மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் செலாவணி வீதத்தின் மீதும் நாட்டின் சென்மதி நிலுவையின் மீதும் ஏற்படக்கூடிய அழுத்தத்தினைக் குறைப்பதற்கு பெருமளவிற்கு உதவின. இறக்குதிக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டுள்ள பொருட்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பு 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஏப்பிறலிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஏறத்தாழ 36 சதவீதத்திற்கு (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.3 பில்லியன்) வகைகூறியது. 28 ஆண்டுகள் கடந்த பின்னர் 2020 செத்தெம்பரில் நடைபெற்ற அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்தி குழுக் கூட்டத்திற்கு மேதகு சனாதிபதி அவர்கள் தலைமை தாங்கினார். 2021இல் பொருளாதார மீட்சி மற்றும் வறுமை ஒழிப்பு மீதான சனாதிபதி செயலணிக்குழு பொருத்தமான ஆர்வலர்களின் செயற்பாடுகளை ஒருமித்ததும் இலக்கிடப்பட்டதுமான செய்முறையில் ஒருங்கிணைக்கின்ற இணைந்த முயற்சியினூடாக ஏற்றுமதி வருவாய்களையும் ஏனைய படுகடனல்லாத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களையும் ஊக்குவிப்பதில் கரிசனை செலுத்தியது.

**2020இல் வெளிநாட்டுத் துறைக்கு நிறுவன ரீதியான ஆதரவினை மேம்படுத்துவதற்குப் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தேசிய ஏற்றுமதி உபாயம் 2018 - 2022 இனைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்திய வேளையில், கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட ஏற்றுமதித் துறைகளுக்குப் புத்துயிரளிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதேவேளை, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை உலளாவிய நோய்தொற்றுக் காலப்பகுதியில் இணையவழி அதேநேர முறைமையினூடாகச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. வர்த்தகச் சம்மேளனங்களும் ஏற்றுமதி ஊக்குவிப்புக்களுக்குப் பங்களித்தன. இவை, கொள்கை வகுப்பிலும் மனக்குறைகளைக் கையாள்வதிலும் அரச,

தனியார் துறையிலுள்ள ஆர்வலர்களை இணைப்பதற்கு உதவின. தேசிய நியமங்களை வடிவமைத்து தரமுயர்த்தியமை உள்நாட்டுத் தயாரிப்பாளர்கள் வெளிநாட்டு உற்பத்திகளுடன் போட்டியிடுவதற்கு உதவின. இதற்கமைய, பன்னாட்டு நியமங்களுக்கிணையாக தேசிய நியமங்களை மேம்படுத்துவதற்கு இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் 2020 இறுதியில் 327 தரங்களை வெளியிட்டது. உலக வர்த்தக அமைப்பின் வர்த்தக வசதிப்படுத்தல் உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் இலங்கைச் சுங்கம் அதன் நடவடிக்கைகளை மேலும் ஒழுங்குமுறைப்படுத்தியது. இதன்படி, இலங்கைச் சுங்கம் முறைமையினை அடிப்படையாகக் கொண்ட தீர்ப்பனவிற்குப் பின்னரான கணக்காய்வினை வலுப்படுத்தி வருகிறது. இது உள்ளகக் கட்டுப்பாடுகளைப் பேணுகின்ற வேளையில் சுங்க நடைமுறைகளை மேலும் எளிமைப்படுத்துவதற்கும் வசதி ஏற்பாடுகளுக்கான செலவுகளைக் குறைப்பதற்கும் இலங்கைச் சுங்கத்தினை அனுமதிக்கின்றது. சுங்கப் பிரகடனங்களின் ஸ்கான் செய்யப்பட்ட பிம்பங்களைக் கையாள்வதற்காக சுங்கத் தரவுகளுக்கான தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமைக்கு நவீன திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இது கொவிட்-19 தொடர்பான முடக்க காலத்தின் போது துறைமுகங்களில் தடங்கலற்ற பணிகள் தொடர்வதற்கு பயன்மிக்கதாக மாறியது. அதேவேளை, இலங்கைச் சுங்கத்தினை நவீனமயப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து ஆலோசனை வழங்குவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் செயற்பாடுகளை மேம்படுத்தி அரசிறை கசிவதனைத் தடுக்கும் நோக்குடன் இலங்கைச் சுங்கம் தொடர்பான விடயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையளிப்பதற்காக 2021 பெப்புருவரியில் சனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

**2020இல் வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் இலங்கையின் ஏற்றுமதிகள், ஏற்றுமதிகளிலிருந்தான ஒட்டுமொத்த வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும்**

அட்டவணை 5.7
முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான இலங்கையின் ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2019 | 2020 (அ) | | | முக்கிய ஏற்றுமதி உற்பத்திகள் (ஏற்றுமதியின் அளவினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது) |
|---|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) | |
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜி.எஸ்.பீ) | 4,020.0 | 3,671.8 | -8.7 | 83.1 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + உள்ளடங்கலாக) (ஆ) | 2,766.3 | 2,597.9 | -6.1 | 58.8 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், தேயிலை, பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, கடலுணவு |
| ஐக்கிய அமெரிக்கா | 709.4 | 585.7 | -17.4 | 13.2 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, வாசனைத் திரவியங்கள், இரசாயன உற்பத்திகள் |
| ருசிய கூட்டாட்சி (இ) | 150.3 | 142.2 | -5.4 | 3.2 | தேயிலை, இறப்பர் உற்பத்திகள், ஆடைகள், தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் |
| துருக்கி | 85.3 | 80.3 | -5.9 | 1.8 | தேயிலை, இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், ஆடைகள், புடவைகள் |
| அவுஸ்திரேலியா | 89.7 | 79.2 | -11.8 | 1.8 | ஆடைகள், இறப்பர் உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை, தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் |
| யப்பான் | 84.9 | 71.0 | -16.4 | 1.6 | தேயிலை, தெங்கு, உள்ளீடற்ற உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள் |
| கனடா | 73.5 | 61.0 | -17.0 | 1.4 | இறப்பர் உற்பத்திகள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், ஆடைகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, தேயிலை |
| ஏனைய முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட முறைமை | 60.6 | 54.6 | -9.9 | 1.2 | |
| 2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 489.6 | 358.4 | -26.8 | 8.1 | விலங்குத் தீனி, சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, வாசனைத் திரவியங்கள், மர மற்றும் காகித உற்பத்திகள் |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (ஈ) | 179.3 | 204.7 | 14.2 | 4.6 | ஆடைகள், தேயிலை, தெங்கு உள்ளீடற்ற உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள் |
| 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை | 80.5 | 89.5 | 11.2 | 2.0 | வாசனைத் திரவியங்கள், அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள், தெங்கு உள்ளீட்டு/ உள்ளீடற்ற உற்பத்திகள், இறப்பர் உற்பத்திகள், விலங்குத் தீனி |
| 2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 60.8 | 53.0 | -12.8 | 1.2 | சிறு வேளாண்மை ஏற்றுமதிகள், இயற்கை இறப்பர், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள், மர மற்றும் காகித உற்பத்திகள் |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 55.9 | 42.2 | -24.4 | 1.0 | வாசனைத் திரவியங்கள், தெங்கு உள்ளிட்ட உற்பத்திகள், ஆடைகள், மர மற்றும் காகித உற்பத்திகள் |
| 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 1.7 | 0.8 | -55.6 | 0.02 | இறப்பர் உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், புடவைகள், தெங்கு உள்ளீட்டுப் பொருட்கள் |
| **முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள்** | **4,887.8** | **4,420.4** | **-9.6** | **100.0** | |
| **இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக** | **40.9** | **44.0** | | | |

(அ) தற்காலிகமானது
(ஆ) ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான தீர்வைகள் 66 வீதமானவைக்கு ஐரோப்பிய ஒன்றிய ஜீ.எஸ்.பீ. முன்னுரிமையான நுழைவை வழங்கும் அதே வேளையில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான பொருட்களின் இறக்குமதிகள் மீதான அதே தீர்வைகளிற்குப் பூச்சிய தீர்வை நுழைவை ஜீ.எஸ்.பீ. + வழங்குகிறது.
(இ) ருசியா, பெலாறுஸ் மற்றும் கசகஸ்தான் உள்ளடங்கலாக
(ஈ) முன்னர் பாங்கொக் உடன்படிக்கை (1975) என அழைக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கை வர்த்தகத் திணைக்களம்
இலங்கை சுங்கம்

**விதத்தில் வீழ்ச்சியடைந்தன.** ஆய்விற்குரிய காலப்பகுதியில், முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டங்களின் கீழ் முக்கிய வர்த்தகப் பங்காளர்களான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவுடனான பரஸ்பர நடவடிக்கைகள் அதிகரித்த சந்தை வாய்ப்புக்களுக்கான பாதைக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்பட்டன. இலங்கை 2020 யூலையில் தாழ்ந்த நடுத்தர வருமான நாடாக மீளவகைப்படுத்தப்பட்டதன் பின்னர், தற்போதைய ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + அது செல்லுபடியாகக்கூடிய 2023 இறுதிவரை அதிலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய அமெரிக்க முன்னுரிமையளிக்கப்பட்ட பொதுவாக்கப்பட்ட திட்டம் 2020 திசெம்பர் 31இல் முடிவடைந்ததுடன் இது ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் பொதுவான நடைமுறைகளுக்கிணங்க மீண்டும் அங்கீகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. 2021 மாச்சு 31இல் காலாவதியாகிய யப்பான் வழங்கிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் மீளாய்வு செய்முறைகளுக்குத் தற்பொழுது உட்பட்டு வருகின்றது. மேலும், தற்பொழுது இலங்கை ருஷிய கூட்டமைப்பு, துருக்கி, அவுஸ்திரேலியா, கனடா, சுவிற்சர்லாந்து, நோர்வே மற்றும் நியூசிலாந்து போன்ற மற்றும் பல நாடுகளினால் வழங்கப்பட்ட முன்னுரிகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் நன்மைகளைப் பெற்றுவருகின்ற போதும் ஏற்றுமதிகளுக்கான அவற்றின் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகவே காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து தனியான தீர்வை முறையாக விளங்குகின்ற ஐரோப்பிய இராச்சியத்தின் உலகளாவிய தீர்வை 2021 சனவரி 01 இலிருந்து நடைமுறைக்கு வந்தது. எனினும் ஐக்கிய ஒன்றியத்தின் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இன் கீழான ஏற்றுமதி ஐரோப்பிய ஒன்றிய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைத் திட்டம் + இன் கீழ் தீர்வையற்ற சந்தைகளை அணுகுவதற்கான நன்மைகள் எவ்வளவு காலம் தொடர்கிறதோ அதுவரை ஐக்கிய இராச்சியத்திற்கான இலங்கையின் உற்பத்திகள் தீர்வையற்ற சலுகைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க முடியும். இருபுடை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ், இந்தியா - இலங்கை வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை போன்றவற்றின் கீழான ஏற்றுமதிகள் 2020இல் வீழ்ச்சியடைந்தது, ஆனாலும் இலங்கைக்கு தொடர்ந்தும் நன்மையளித்தன. எனினும், 2020இல் இந்தியா மற்றும் பாகிஸ்தானுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளூடான ஏற்றுமதிகள் இந்நாடுகளுக்கான ஏற்றுமதிகளில் முறையே 59 சதவீதம் மற்றும் 71 சதவீதப் பங்குகளைக் கொண்டு உயர்வாகக் காணப்பட்டன. அதேவேளை, இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் பாகிஸ்தான் - இலங்கை வர்த்தக உடன்படிக்கையின் கீழான இறக்குமதிகள் இந்தியா மற்றும் பாகிஸ்தானிடமிருந்தான மொத்த இறக்குமதிகளில் முறையே 5.2 சதவீதத்துடனும் (ஐ.அ.டொலர் 159 மில்லியன்) மற்றும் 3.3 சதவீதத்துடனும் (ஐ.அ.டொலர் 11 மில்லியன்) தொடர்ந்தும் இவ்வாண்டிலும் குறைவாக விளங்கின. பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (சீனா, தென்கொரியா மற்றும் வங்காளதேசம் என்பனவற்றிற்கான உயர்ந்த ஏற்றுமதிகள்) மற்றும் வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய முறைமை (பேரூவிற்கான உயர்ந்த கறுவா ஏற்றுமதி காரணமாக) என்பனவற்றின் கீழான ஏற்றுமதிகள் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் மேம்பட்டன. எனினும், சார்க் முன்னுரிமை வர்த்தக ஏற்பாடுகள் மற்றும் தென்னாசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழான ஏற்றுமதிகள் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் தொடர்ந்தும் குறைவானவையாக விளங்கியமையானது பிராந்திய வர்த்தகம் மற்றும் பணிகள் வலையமைப்பிற்கிடையே ஒத்துழைப்பினை அதிகரிப்பதன் முக்கியத்துவத்தினைக் கருத்திற்கொண்டு பிராந்திய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய தேவையினை எடுத்துக்காட்டுகிறது. உற்பத்திகள் போதுமானளவிற்குப் பன்முகப்படுத்தப்படாமை, அவ்வப்போது செய்யப்படும் கொள்கை மாற்றங்கள் மற்றும் நடவடிக்கை முறை தாமதங்கள் போன்ற தீர்வையல்லாத் தடைகள் என்பன இருபுடை மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளின் முழு நன்மைகளையும் பெறுவதற்குத் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாகவுள்ளன. 2020ஆம் ஆண்டுப்பகுதியில், வர்த்தகத் திணைக்களம் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் சலுகைகளை அவ்வுடன்படிக்கைகளின் கீழ், மூல உற்பத்திகளை மூன்றாவது நாடொன்றிற்கு மீள அனுப்புவதனூடாக தவறாகப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்களைக் கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறது. இலங்கையின் உலக வர்த்தக அமைப்புடனான பல்புடை வர்த்தக நடவடிக்கைகள் 2020இலும் தொடர்ந்த போதும், 2020 யூனில் நடத்துவதற்கு அட்டவணையிடப்பட்டிருந்த 12ஆவது அமைச்சர் மட்டத்திலான மாநாடு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக 2021 யூன் வரை பிற்போடப்பட்டிருக்கிறது.

**சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் விரும்பத்தக்க தன்மை பற்றி ஆர்வலர்களின் அபிப்பிராயம் கணிசமாக வேறுபடுகின்றது, ஆனாலும் இந்த உடன்படிக்கைகளிலுள்ள நிபந்தனைகள் உள்ளூர் கைத்தொழில்களுக்கும் தொழில்முயற்சிகளுக்கும் தீங்குவிளைவிக்கக்கூடாதென்பது பரந்தளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.** சீனா, இந்தியா மற்றும் தாய்லாந்து என்பனவற்றுடனான முன்மொழியப்பட்டுள்ள பங்குடமை உடன்படிக்கை மீதான அலுவலர்களின் இருபுடை பேச்சுவார்த்தைகளைக் கொண்ட சுற்று 2018இலிருந்து சிறிய முன்னேற்றத்தினையே காட்டியது. நோய்த்தொற்றின் விளைவாக ஏற்பட்ட தடங்கல்களின் காரணமாக இருபுடை மற்றும்

5

பிராந்திய உடன்படிக்கைகள் மீதான அட்டவணையிடப்பட்ட கூட்டங்கள் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் பிற்போடப்பட்ட வேளையில், சில கூட்டங்கள் மெய்நிகர் இணையவழி மூலமாக நடத்தப்பட்டன. மேலும், சிங்கப்பூர் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பில் பல ஆர்வலர்களினால் கரிசனைகள் தெரிவிக்கப்பட்டதற்கு மத்தியில் ஏற்கனவேயுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கான திருத்தங்களுக்கான விதந்துரைப்புக்களுடன் 2018/19 காலப்பகுதியில் மீளாய்வு செய்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கமைவாக, 2021 சனவரியில் அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஒப்புதலுக்கிணங்க, உத்தேச திருத்தங்களை செய்வதற்காகவும் சிங்கப்பூருடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவும் தொழில்நுட்ப உதவிக்குழுவொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இதேவேளை, இந்தியா மற்றும் சீனா உள்ளடங்கலாக இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான அனைத்தையுமுள்ளடக்கிய உடன்படிக்கைகளின் சாத்தியமான செலவுகள் மற்றும் நன்மைகள் பற்றி ஆர்வலர்களால் வேறுபட்ட கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. வர்த்தகப் பேச்சுவார்த்தைகளினூடாக இலங்கைக்கு எதிர்பார்க்கப்படும் நன்மைகளை அடைந்து கொள்வதற்கு வெளிநாட்டு எதிர்த்தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் தொடர்புபட்ட அனைத்து ஆர்வலர்களுடனும் கலந்தாலோசிப்பதற்கும் தேசிய அக்கறை தொடர்பில் பரந்த ஒருங்கிசைவை அடைந்து கொள்வதற்குமான தேவைப்பாட்டினை இத்தகைய கருத்துக்கள் கோடிட்டுக்காட்டுகின்றன. சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தொடர்பான எதிர்காலச் செயற்பாடுகளினை முன்னெடுப்பதற்கு இத்தகைய ஒருங்கிசைவானது தற்பொழுது உருவாக்கப்பட்டு வருகின்ற நாட்டிற்கான தேசிய வர்த்தகக் கொள்கையினுள் உள்வாங்கப்பட வேண்டும்.

5

### 5.2.2 பணிகள் கணக்கு

**கொவிட்-19 நோய்த்தொற்றின் தாக்கம் காரணமாக, பணிகள் கணக்கின் மிகை 2020இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** சுற்றுலா மற்றும் போக்குவரத்துப் பணிகளிலிருந்தான வருவாய்கள் சுருங்கியமையின் காரணமாக பணிகள் கணக்கிலுள்ள தேறிய மிகை 2020இல் ஐ.அ.டொலர் 2.0 பில்லியனால் குறைவடைந்தது.

### பயணம் மற்றும் சுற்றுலா


**சுற்றுலாப் பயணிகளுக்கான விசா வழங்கலுடன் சேர்த்து அனைத்துப் பயணிகளின் விமானப் பயணங்கள், கப்பல்களின் வருகைகள் 2020 மாச்சு 18 இலிருந்து இடைநிறுத்தப்பட்டமையின் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் கடுமையான வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.** இவ்வாண்டுப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் மொத்த எண்ணிக்கை 507,704 இற்கு மட்டுப்படுத்தப்பட்டது. இது 2020இன் முதல் மூன்று மாத காலப்பகுதியிலும் வருகை தந்த 507,311 சுற்றுலாப் பயணிகளையும் 2020 திசெம்பரில் "உயிரினக் குமிழ்கள்" கருதுகோளினை அடிப்படையாகக் கொண்ட முன்னோடிச் செயற்றிட்டத்தின் கீழ் வருகை தந்த உக்ரேனிலிருந்தான 393 சுற்றுலாப் பயணிகள் குழுவினையும் உள்ளடக்கியிருந்தது. இதன்படி, சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 73.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. சுற்றுலாப் பயணிகளின் வருகையை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்பட்ட சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2020இல் ஐ.அ.டொலர் 682 மில்லியனுக்கு 81.1 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

**கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட சுற்றுலாத் துறையிலுள்ள ஆர்வலர்களுக்கு உதவியளிப்பதற்காக 2019இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலினைத் தொடர்ந்து வழங்கப்பட்ட நிவாரணத்தினை நீடிப்பதற்கான வழிமுறைகள் உட்பட அரசாங்கத்தினாலும் மத்திய வங்கியினாலும் பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலின் பேரில் மத்திய வங்கியின் கோரிக்கைக்கிணங்க உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளினால் வழங்கப்பட்ட ஆரம்பத்தில் 2020 மாச்சு 31 வரை வலுவிலிருந்த படுகடன் சட்ட இசைவுத்தாமதம் நோய்த்தொற்றின் காரணமாக துறைக்கு ஏற்பட்ட மோசமான தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு 2021 மாச்சு 31 வரை நீடிக்கப்பட்டது. இச்சட்ட இசைவுத்தாமதம் 2021 ஏப்பிறல் 01 இலிருந்து மேலுமொரு ஆறு மாதத்திற்கு மீண்டும் நீடிக்கப்பட்டது. சுற்றுலா தொடர்பான ஊர்திகளின் குத்தகை வாடகை மீது சட்ட இசைவுத்தாமதம் வழங்கப்பட்டதுடன் படுகடன் சட்ட இசைவுத்தாமதத்துடன் சேர்த்து நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இத்துறையில் ஈடுபட்டுள்ள வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சௌபாக்கியா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதியின் கீழ், 4.00 சதவீதத்திலான கடன்களைப் பயன்படுத்தக்கூடியவர்களாக இருந்தனர். இது, பரந்தளவிலான சுற்றுலாத் துறை நிறுவனங்களிற்கு அவற்றின் திரவத்தன்மையினையும் கடன் தீராற்றலையும் முகாமைப்படுத்துவதனை இயலச்செய்ததுடன் தொழில்வாய்ப்புக்களையும் பேணுவதில் துணைபுரிந்தது. அரசாங்கமும் இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள பல்வேறு தரப்பினர்களுக்கு நிவாரண வழிமுறைகளை வழங்கியது. அரசாங்கம் தனிமைப்படுத்தல் நிலையங்களை நடத்துவதற்கும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு நியமங்களையும் பரிசோதனைகளையும் நடைமுறைக்கிடுவதற்கும் சுற்றுலாத் துறையை அனுமதித்தமை இக்காலத்தில் சுற்றுலாத் துறைக்கு ஓரளவிற்கு உதவியது. மின்பட்டியலைச் செலுத்துவதற்கு அத்தகைய பட்டியல் 2020 மாச்சிலிருந்து 2021 பெப்புருவரி 28 வரையான காலத்தில் ஒன்றுசேர்ந்தனவாக இருக்குமிடத்து

அதனை 2021 ஏப்பிறல் 01 இலிருந்து தவணை முறையில் செலுத்த முடியுமெனும் சலுகைக்காலம் வழங்கப்பட்டது. இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையினூடாக மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளானவை இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையில் பதிவுசெய்யப்பட்டுள்ள சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் சுற்றுலாப் பயண ஓட்டுநர்களுக்கும் ஒரே தடவையில் செலுத்தப்பட்ட கொடுப்பனவு; தங்குமிடத் துறை, பயண முகவர்கள், சுற்றுலா வழிகாட்டிகள் மற்றும் சுற்றுலாப் பயண ஓட்டுநரின் வருடாந்த உரிமம் புதுப்பித்தல் கட்டணத்தை இரத்துச் செய்தமை; சுற்றுலாத் தொழிலிலுள்ள முறைசாராத் துறைக்கு ஆதரவளிப்பதற்கான தற்காலிகப் பதிவு போன்றவற்றை உள்ளடக்குகின்றன. மேலும், இலங்கை சுற்றுலா அபிவிருத்திச் சபையுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள சுற்றுலாவிடுதிகள், விருந்தினர் இல்லங்கள், உணவகங்கள் அல்லது அதையொத்த வியாபாரங்களுக்கு 2019 திசெம்பரிலும் சுற்றுலாப் பயணிகளுக்காகப் பணிகளை வழங்கும் இலங்கை சுற்றுலா அபிவிருத்திச்சபையுடன் பதிவுசெய்யப்பட்ட பயணமுகவர்களுக்கு 2020 ஏப்பிறலிலும் வழங்கப்பட்ட பெறுமதிசேர் வரி விலக்களிப்புக்களும் இத்துறைக்கு உதவியாக அமைந்தன.

**சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்காக நவீனமுறைகளை நடைமுறைப்படுத்தும் அதேவேளை உள்ளூர் சமூகத்தினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்தில் தனியார் துறையினருடன் சேர்ந்து அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட தீவிரமான வழிமுறைகளின் காரணமாக 2021 சனவரியில் சுற்றுலாப் பயணிகளுக்காக நாட்டினைத் திறந்து விடுவதற்கு இலங்கை தயாராக இருந்தது.** சுகாதார அமைச்சு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் என்பனவற்றின் உதவியுடன் சுற்றுலாத் துறை அமைச்சினால் சுற்றுலாப் பயண பாதுகாப்பு உபசரணைகள் வழங்கப்பட்டமையினைத் தொடர்ந்து 2020 ஓகத்தில் இலங்கை "பாதுகாப்பு பயண முத்திரை" இனை உலக பயண மற்றும் சுற்றுலாச் சபையிடமிருந்து பெறக்கூடியதாக இருந்தது. "பாதுகாப்பானதும் நம்பிக்கையானதும்" என்ற சான்றுபடுத்தலுக்காக விபரமான கணக்காய்வொன்றினை நடத்துவதற்காக சுயாதீனமான கணக்காய்வு நிறுவனமொன்று நியமிக்கப்பட்டது. இது, சுற்றுலா விடுதிகள் மற்றும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உபசரணைகள் தொடர்பில் பின்னூட்டல்களை வழங்குவதற்கு சுற்றுலாப் பயணிகளை அனுமதிக்கின்ற கியுஆர் குறியீடுகளையும் உள்ளடக்குகிறது. அத்தகைய கணக்காய்வு தொடர்பான செலவுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை ஏற்றுக்கொள்ளும். இம்முன்னெடுப்பிற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப முகவர் மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றின் உதவியுடன் முதலாவது "இலங்கை சுற்றுலாப் பயணிகள் செயலி செல்லிடத் தொலைபேசி பதிப்பு 0" உருவாக்கப்பட்டு வருகின்றது. இப்பிரயோகங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் இலத்திரனியல் மற்றும் பயண சான்றளித்தல் வெப்தள நுழைவாயிலினூடாக இணைக்கப்படும் என்பதுடன் இது சுற்றுலாப்பயணிகளுக்குப் பயணத் தகவல்களை வழங்கப் பயன்படுத்தப்படவுள்ள அதேவேளையில் சுகாதார உபசரணைகளைப் பின்பற்றுவது தொடர்பான தகவல்களையும் பேணும். இப்பின்னணியில், அரசாங்கம் 2020 திசெம்பரில் "உயிரினக் குமிழ்கள்" என அழைக்கப்படும் கருதுகோளின் கீழ் சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கான முன்னோடி நிகழ்ச்சித்திட்டமொன்றினைத் தொடங்கியது. இக்கோட்பாட்டின் கீழ் சுற்றுலாப் பயணிகள் ஒப்புதலளிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகளிலேயே தங்கியிருத்தல் வேண்டுமென்பதுடன் ஒப்புதலளிக்கப்பட்ட நாட்களில், நேரத்தில் ஒப்புதலளிக்கப்பட்ட சுற்றுலாத் தலங்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட போக்குவரத்து மூலம் விஜயம் செய்தல் வேண்டும். இதன் மூலம் உள்ளூர் சமூகத்தினருடனான தொடர்புகள் கட்டுப்படுத்தப்படுகின்ற அதேவேளையில் பாரம்பரியமாக ஒரே கட்டத்தில்/ இடத்தில் 14 நாட்களுக்கு தங்கியிருக்க வேண்டுமென்ற தனிமைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு பயணிகள் உட்படுகின்ற நிலைமை தவிர்க்கப்படுகிறது. "உயிரினக் குமிழ்கள்" திட்டத்திற்கான முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2020இல் 393 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்ததற்குப் புறம்பாக 9,629 சுற்றுலாப்பயணிகள் 2021இன் முதல் மூன்று மாதங்களில் "உயிரினக் குமிழ்கள்" இன் கீழ் பயணம் செய்திருக்கின்றனர். அதேவேளை, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை 2020இல் ஐ.அ.டொலர் 118 மில்லியன் பெறுமதியான 29 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்திருக்கிறது. இவை முக்கியமாக சுற்றுலாப் பயணிகள் தொடர்பான கட்டுமான வசதியுடன் தொடர்பானவையாகும். மேலும், தொடர்பான மாகாண சபைகளின் ஆதரவுடன் குறைந்தளவில் அறியப்பட்ட சுற்றுலா மையங்களின் கவரும் தன்மையினை அபிவிருத்தி செய்வதற்கும் ஏற்கனவேயுள்ள சுற்றுலா

வரைபடம் 5.10
சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் மற்றும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள்




*மூலம்* : இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை

5

அமைவிடங்களை விரிவாக்கி அபிவிருத்தி செய்து கவர்வதற்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அனைத்து ஒன்பது மாகாணங்களுக்குமாக மாகாண சபைகளினால் முன்மொழியப்பட்ட அமைவிடங்களுடன் “தேசிய நீடித்துநிலைத்திருக்கும் அமைவிட சான்றுபடுத்தல்” ஆரம்பிக்கப்பட்டது. தனியார் துறையினருடன் இணைந்து இலங்கை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்படும் திட்டமிடப்பட்ட சுற்றுலா மீளெழுச்சி உபாயங்களின் காரணமாக சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் 2021இல் படிப்படியாக வழமைக்குத் திரும்பும் எனவும் உலகளாவிய ரீதியில் இடம்பெறும் தடுப்பு மருந்து நிகழ்ச்சித்திட்டம் உலகளாவிய நோய்த்தொற்று தொடர்பான அச்சத்தினை ஓரங்கட்டிவிடுமென்பதனால் அதன் பின்னர் கணிசமாக வேகமடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### போக்குவரத்து, தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல் பணிகள் மற்றும் ஏனைய பணிகள்

**2020இல் கணனி மற்றும் தகவல் பணிகள் துணைத் துறையானது பணிகள் துறையிலிருந்தான வருவாய்களின் முக்கிய இயக்கியாகவிருந்த அதேவேளையில் உலகளாவிய ஏற்பாட்டு வசதிகளுக்கு ஏற்பட்ட இடையூறுகளின் காரணமாக போக்குவரத்துத் துறையிலிருந்தான வருவாய்கள் கணிசமானளவு வீழ்ச்சியடைந்தன.** தகவல் தொழில்நுட்பம்/ வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் 2020இல் குறிப்பாக, ஆரம்ப உலகளாவிய நோய்த்தொற்றின் பின்னர் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் காரணமாக கணனிப் பணிகள் துணைத் துறை இவ்வாண்டுப்பகுதியில் உயர்ந்த உட்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. கொள்கலன் கையாளலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததுடன் வழங்கல் சங்கிலி தடங்கல்கள் மற்றும் அத்தியாவசியமல்லா இறக்குமதிகள் மீது, குறிப்பாக, உந்து ஊர்திகள் மீதான கட்டுப்பாடுகள் காரணமாக கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றலில் ஓரளவு மிதமான தன்மை காணப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை நிறுத்தப்பட்டமையுடன் இசைந்து செல்லும் விதத்தில் வான் பயணிகள் பணிகளிலிருந்தான வருவாய்களில் கணிசமான குறைப்புக் காணப்பட்டது. நோய்த்தொற்றின் காரணமாக வதிவல்லா விமான நிறுவனங்களின் மட்டுப்படுத்தப்பட்ட தொழிற்பாடுகளின் காரணமாக பயணிகள் பணிகளின் வெளிப்பாய்ச்சலும் குறைவடைந்தது. காப்புறுதி, நிதியியல் பணிகள், கட்டடவாக்கப் பணிகள் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் உட்பட பெரும்பாலான மற்றைய துணைத் துறைகள், உலகளாவிய தாழ்ந்த பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக, 2020இல் உட்பாய்ச்சல்கள் மற்றும் வெளிப்பாய்ச்சல்கள் இரண்டும் வீழ்ச்சியினைப் பதிவுசெய்தன. இத்தகைய அபிவிருத்திகளின் காரணமாக, பணிகள் கணக்கிலுள்ள மிகை 2019இன் ஐ.அ.டொலர் 2,849 மில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 819 மில்லியனுக்குக் கணிசமாகச் சுருக்கமடைந்தது.

### 5.2.3 முதலாந்தர வருமானம்

**கடந்த தசாப்த காலத்தில் தொடர்ச்சியாக அதிகரித்து வந்த முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறை 2020இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.** இச்சுருக்கத்திற்கு அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகள் மீதான வட்டி மற்றும் கூப்பன் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளின் பங்கிலாபக் கொடுப்பனவுகளிலும் மீள்முதலிடப்பட்ட வருவாய்களிலும் ஏற்பட்ட குறைப்பு என்பன முக்கிய காரணங்களாகும். இவ்வாண்டுப்பகுதியில் வதிவற்றோருக்குச் சொந்தமான திறைசேரி உண்டியல்களினதும் திறைசேரி முறிகளினதும் வெளிநின்ற தொகை கடுமையாக வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக கூப்பன் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தன. ஆண்டு காலத்தில் இரண்டாந்தரச் சந்தையில், வதியும் வங்கிகள் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காரணமாக 2020இல் வதிவற்றோருக்குச் செலுத்தப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான கூப்பன் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிகையில் மிதமானளவினால் மாத்திரமே அதிகரித்தன. மேலும், அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தவிடத்து தனியார் துறை, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் முதலீட்டுச் சபைக் கம்பனிகள் என்பனவற்றின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளின் இணைந்த விளைவு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2020இல் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட ஒட்டுமொத்த வீழ்ச்சியொன்றின் விளைவாகும். நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளில் மீள்முதலிடப்பட்ட வருவாய்களிலும் பங்கிலாபக் கொடுப்பனவுகளிலும் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பும் முதலாந்தர வருமானக் கணக்கின் பற்றாக்குறையில் ஏற்பட்ட சுருக்கத்திற்குப் பங்களித்தன. முதலாந்தர வருமானக் கணக்கிலிருந்தான வெளிப்பாய்ச்சல்களாகக் கருதப்படும் மீள்முதலீடு செய்யப்பட்ட வருவாய்கள் வடிவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இவ்வாண்டுப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் காணப்பட்ட பொதுவான குறைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் 2020இல் வீழ்ச்சியடைந்தன. குறைவடைந்த பொருளாதார


### சிறப்புக்குறிப்பு 04
### தொழிலாளர் பணவனுப்பல்கள்: போக்குகள், பிரச்சனைகள் மற்றும் முன்னோக்கிய பார்வை

கடந்த தசாப்தத்தில் இலங்கையின் சென்மதி நிலுவையில், வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலின் மிகப்பெரும் ஒற்றை மூலமாகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் திகழ்கின்றன. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் முன்னிலையில் உலகளாவிய எதிர்பார்க்கையான தொழிலாளர் பணவனுப்பல்களில் சாத்தியமான மெதுவடைவுக்கு முரணாக, இலங்கை மற்றும் தென்னாசியாவிலுள்ள வேறு சில நாடுகள் விதிவிலக்குகளாகவிருந்து முதலரையாண்டுப் பகுதியில் பதிவான வீழ்ச்சியிலிருந்து சடுதியானதொரு மீட்சியினை எடுத்துக்காட்டி, 2020இல் ஆரோக்கியமான பணவனுப்பல் பாய்ச்சல்களைப் பதிவு செய்தன. இந்தப் பின்னணியில், படுகடனை உருவாக்காத வெளிநாட்டு நிதியிடல் மூலமொன்றாகத் தொழிலாளர் பணவனுப்பல்களின் முக்கியத்துவத்தினையும், நாட்டில் நீடித்து நிலைத்திருக்கும் வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சலாகப் பணவனுப்பல்களை மேம்படுத்துவதில் காணப்படக்கூடிய தொழிலாளர் புலம்பெயர்வுடன் தொடர்புடைய தீர்க்கப்பட வேண்டிய சமூகப் பொருளாதார சவால்களையும் அடையாளம் காண்பது தவிர்க்க முடியாததொன்றாகின்றது. இதனடிப்படையில், இச்சிறுகுறிப்பானது தொழிலாளர் பணவனுப்பல்களுடன் தொடர்புடைய வரலாற்றுப் போக்குகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பலுடன் தொடர்புடைய பொருளாதார நன்மைகள் மற்றும் சமூகக் கலாச்சார கரிசனைகளைக் கலந்துரையாடுகின்ற வேளையில் பணவனுப்பல்களை மேம்படுத்துவதிலுள்ள சவால்கள் மற்றும் பணவனுப்பல்களை விருத்தி செய்வதற்கான வழிமுறைகளைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

#### தொழிலாளர் பணவனுப்பல்களிலுள்ள வரலாற்றுப் போக்குகள்


வர்த்தக மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குகளிலுள்ள பற்றாக்குறைகளிலிருந்து தோற்றம்பெற்ற நடைமுறைக் கணக்குக் குறைபாட்டுக்கு எதிரான காப்பீடாகத் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்து காணப்பட்டு வருகின்றன. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கின் இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்களில் ஏறத்தாழ 100 சதவீதத்தினை தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்ளடக்கியுள்ளன. கடந்த இரண்டு தசாப்தங்களில், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிற்கான மொத்தப் பற்றுக்களில் வருடாந்தப் பணவனுப்பல்கள் சராசரியாக நான்கில் ஒன்றினை அண்மித்த பங்கினைப்

வரைபடம் சி.கு. 4.1
நடைமுறைக் கணக்கின் உள்ளடக்கம்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 4.2
தொழிலாளர் பணவனுப்பல்கள்




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளதுடன் விதிவிலக்காக 2020இல் மூன்றிலொரு (35 சதவீதம்) பங்கினை விடக் கூடுதலானளவிற்கு விஞ்சியமை இப்பங்கு வெளிநாட்டுத் துறைப் பாதிப்புக்களைத் தணிப்பதில் மற்றும் பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டினைப் பேணுவதில் பணவனுப்பல்களின் முக்கியத்துவத்தினை மீள்வலியுறுத்துகின்றது. வர்த்தகப் பற்றாக்குறைக்கு நிதியிடும் பிரதான மூலமாகத் திகழ்ந்து, கடந்த இரண்டு தசாப்தங்களில் வருடாந்த வர்த்தகப் பற்றாக்குறையில் ஏறத்தாழ 80 சதவீதத்தினைத் தொழிலாளர் பணவனுப்பல்கள் உள்ளடக்கியிருப்பதுடன் பணவனுப்பல் உட்பாய்ச்சலானது வர்த்தகப் பற்றாக்குறையில் ஏறத்தாழ 118 சதவீதத்துக்கு வகைகூறி 2020இல் வர்த்தகப் பற்றாக்குறையினை விஞ்சியுள்ளது. 2020இல் சுற்றுலாத்துறை வருவாய்களின் கடுமையான வீழ்ச்சியின் தாக்கத்தினைக் குறைக்க தொழிலாளர் பணவனுப்பல்களின் அதிகரிப்புத் துணையளித்தது.


1981-2000 ஆண்டு காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதத்தில் ஏறத்தாழ 5.7 சதவீத சராசரியைக் கொண்டிருந்த தொழிலாளர் பணவனுப்பல்கள், 2001-2020 காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் ஏறத்தாழ 8.0 சதவீதத்திற்கு அதிகரித்தமை இலங்கையின் மொ.உ.உற்பத்தி தொடர்பில் தொழிலாளர் பணவனுப்பல்களின் அதிகரித்த முக்கியத்துவத்தினைப் பிரதிபலிக்கின்றது. இருப்பினும், 2016 மற்றும் 2020 காலப்பகுதியினைத் தவிர்ந்த கடந்த ஆறு வருட காலப்பகுதியில் பணவனுப்பல்கள் வீழ்ச்சியானதொரு போக்கினைக் காண்பிக்கின்றன. 2020இன் இரண்டாம் அரையாண்டு காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதுடன் 2020 திசெம்பரில் வரலாறு காணாதளவில் உயர்ந்தளவான மாதாந்த பணவனுப்பல்களைப் பதிவு செய்துள்ளன. இதன்படி, 2020 காலப்பகுதியில் தொழிலாளர் பணவனுப்பல்கள், 7.1 பில்லியன் ஐ.அ.டொலர்களுக்கு ஆண்டுக்கு ஆண்டளவில் 5.8 சதவீதத்தினால் அதிகரித்தன. இலங்கையின் அயல் நாடுகளான வங்களாதேசம், பாகிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகள் 2020இன் மூன்றாம் காலாண்டு தொடக்கம் பணவனுப்பல்களில் பகுதியளவான மீட்சியியொன்றினை எடுத்துக்காட்டத் துவங்கியுள்ளன.

உலகளாவிய ரீதியில் நோக்கும் போது, முதல் தர பணவனுப்பல் பெறுநர்களாகப் பல ஆசிய நாடுகள் முன்னணி வகிக்கின்றன. அதிகூடிய பணவனுப்பல் பெறுநராகவுள்ள இந்தியா ஐ.அ.டொலர்

5

வரைபடம் சி.கு. 4.3

தென்னாசியா மற்றும் தென் கிழக்காசியாவின் முதல் தர பணவனுப்பல் பெறுநர்கள்- 2019




*மூலம்:* உலக வங்கி

83 பில்லியனை 2019இல் பதிவுசெய்த அதேவேளை, சீனா, பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், வங்களாதேசம் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகளும் பணவனுப்பல்களைப் பெறும் முதல் தர பத்து நாடுகளில் அடங்குகின்றன (உலக வங்கி, 2019). தென்னாசியா மற்றும் தென் கிழக்காசியவிலுள்ள பெயரளவிலான உள்முகப் பணவனுப்பல்களின் அடிப்படையில் இலங்கை அதன் அயல் நாடுகளின் பின்னால் இருப்பினும் கூட, மொ.உ.உற்பத்தி தொடர்பிலான தொழிலாளர் பணவனுப்பல்களில் இலங்கையின் செயலாற்றுகையானது இரண்டு பிராந்தியங்களில் முதல் தர ஐந்து பணவனுப்பல் பெறுநர்களுக்கு மத்தியில் தடம் பதிக்கச் செய்துள்ளது.

**தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பிலான பொருளாதார நன்மைகளும் சமூகக் கலாச்சார கரிசனைகளும்**

குறிப்பாக, தாழ்ந்த மற்றும் நடுத்தர வருமானமீட்டும் இலங்கையைப் போன்ற நாடுகளுக்குத் தொழிலாளர் பணவனுப்பல்கள் தெளிவாகப் புலப்படக்கூடிய உறுதியான நன்மைகளை வழங்குகின்றன. பணவனுப்பல்கள், பெறுநர்களின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் நேர்மறையான பெருக்கி விளைவுகளையும் உருவாக்கின்ற வேளையில் அவர்களது நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகளை அதிகரிக்கின்றன. (ரதா மற்றும் மைம்போ, 2005). மேலும், சுழற்சிப் போக்கினையுடைய மூலதன உட்பாய்ச்சல்களுக்கு மாறாக, பொருளாதார நெருக்கடிகள் அல்லது இயற்கைப் பேரனர்த்த காலப்பகுதிகளில் காப்பீடாக செயற்பட்டு ஒப்பீட்டு ரீதியில் உறுதியானதாகவும் பொதுவாக நுகர்வு சீராக்கியாகவும் பணவனுப்பல்கள் காணப்படுகின்றன (பெட்டின் மற்றும் ஸஸாரோ, 2016 மற்றும் டீ மற்றும் ஏனையோர், 2016, 2019 உலக வங்கியில் குறித்துக்காட்டப்பட்டுள்ளது). வறுமையைக் குறைக்கும் இயலுமை மற்றும் பயனாளிக் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்தல் போன்ற பல்வேறு அம்சங்களில் செழிப்பினைப் பகிருமொரு வழியாகப் பணவனுப்பல்கள் மாறியுள்ளன.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களுக்கான புலம்பெயர்வு நாட்டுக்கான அதிகபட்ச நன்மைகளை அடைவதில் தடையாகவுள்ள சமூக மற்றும் பொருளாதார செலவினங்களுடன் பொதுவாகத் தொடர்புடையதாயுள்ளன. குடும்ப உறுப்பினர்களின், குறிப்பாக நாட்டில் விட்டுச் செல்லப்பட்டுள்ள குழந்தைகளின் நலனோம்புகையில் ஏற்படக்கூடிய தாக்கத்திலிருந்து தோன்றும் சமூகச் செலவினங்கள் தொழிலாளர் புலம்பெயர்வின் முதன்மைச் செலவினங்களாகக் காணப்படுகின்றன. பெரும்பாலான நேரங்களில், தொழிலாளர்களின், குறிப்பாக தாய்மாரின் புலம்பெயர்வுடன் குழந்தைகளின் சுகாதாரம், ஊட்டச்சத்து மற்றும் பாதுகாப்பு போன்றவை விட்டுக்கொடுக்கப்படுகின்றன. மேலும், புலம்பெயர்ந்த சில தொழிலாளர்களுக்கும் அதேபோன்று அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும் நிதியியல்சார் கல்வியறிவு குறைவாக உள்ளமை அடிக்கடி உற்பத்திசார் நோக்கங்களுக்காகப் பணவனுப்பல்களின் மோசமான முகாமைத்துவத்திற்கு வழிவகுத்து அவர்களது குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத்தரத்தில் எதிர்பார்க்கப்பட்ட மேம்படுத்தல்களை அடைவதை கடினப்படுத்துகின்றன. சில குடியிருப்புக்களில் பிள்ளைகளின் கல்வி அல்லது முதலீட்டு நோக்கங்களுக்காக அல்லாமல் மதுசாரம் அல்லது போதைவஸ்து நுகர்விற்காக பணவனுப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பிரச்சனைகள் வீட்டுப் பணிப்பெண் தொழில்களுக்காகப் புலம்பெயர்ந்த குடும்பங்களில் பெருமளவு முக்கியமாகவிருக்கின்றன.

**பணவனுப்பல்களை மேம்படுத்துவதிலுள்ள தடைகளும் கொள்கைப் பரிந்துரைகளும்**

சமூகப் பிரச்சினைகளைத் தவிர, புலம்பெயர்ந்த ஊழியர்களின் வருவாய்த் திறனை மேம்படுத்துவதற்குப் பல காரணிகளும் தடையாகவிருந்து இதனால் பணவனுப்பல்களையும் பாதிக்கின்றன. புலம்பெயர்ந்த ஊழியர்களின் திறன் விபரங்களைப் பொறுத்தவரையில், இலங்கையானது வீட்டுப் பணிப்பெண்களில் பெரிதும் தங்கியுள்ளது. ஆயினும், இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் வருடாந்த புலம்பெயர்வுகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மிகப் பெரிய பங்கைக் கொண்டிருந்த இந்த வீட்டுப் பணிப்பெண்கள், 2020ஆம் ஆண்டில் 30 சதவீதத்திற்கு வெகுவாகக் குறைந்துள்ளனர். மறுபுறம், அதே காலப்பகுதியில், தொழில்முறைசார் மற்றும் தேர்ச்சியான பணியாளர் பிரிவுகளின் கீழ் தொழிலாளர் புலம்பெயர்வின் பங்கானது கிட்டத்தட்ட 21 சதவீதத்திலிருந்து 37 சதவீதமாக அதிகரித்துள்ளது. தேர்ச்சியான தொழிலாளர் புலம்பெயர்வில் மேல்நோக்கிய போக்கொன்று காணப்பட்டபோதிலும், வேலைகளுக்கான பன்னாட்டுக் கேள்விக்கும் இலங்கையின் வழங்கல் இயலளவுக்குமிடையில் பாரியளவிலானதொரு பொருத்தப்பாடின்மை நிலவுகின்றது. முதியோர் சனத்தொகை உள்ளடங்கலாக குடித்தொகையிலுள்ள மாற்றத்துடன் அதிகரித்த பெண்கள் தொழிற்படையின் பங்கேற்பு வீதம் போன்றவற்றுடன் தாதியர் மற்றும் முதியோர் பராமரிப்புப்

போன்ற சிறப்பியல்பு வாய்ந்த பணிகளுக்கான உயர் கேள்வியானது, முன்னேற்றங்கண்ட பொருளாதாரத்தில் உருவாக்கப்படுகின்றன. வீட்டுப் பணிப்பெண்களின் மூலம் ஈட்டக்கூடிய வருமானத்தைக் காட்டிலும் இத்தகைய பணிகளில் அதிகளவிலான வருமானத்தை ஈட்டுக்கூடிய ஆற்றல் காணப்படுகின்றது. ஆயினும், திறன் இடைவெளியைக் குறைப்பதற்கும், இலங்கை புலம்பெயர்ந்த ஊழியர்களின் பன்னாட்டுச் சந்தைகளுக்கான தயார்நிலையை அதிகரிப்பதற்குமான வேலை சார்ந்த பயிற்சியினை வழங்குவதற்காக வெளிநாட்டு தொழில்தருநரால் அங்கீகரிக்கப்பட்ட பன்னாட்டு அங்கீகாரத்துடன் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சி நிறுவனங்களையே இலங்கை கொண்டுள்ளது.

வெளிநாட்டு செலாவணியின் ஒப்பீட்டளவில் நிலையான மூலமாக இருந்தபோதிலும், இலங்கையானது, தொழிலாளர் புலம்பெயர்வுக்கான இடமாக மத்திய கிழக்கு நாடுகளை அதிகளவில் நம்பியிருப்பதால் மூல நாடுகளின் பொருளாதார மற்றும் அரசியல் தளம்பல்களுக்கு இலங்கையின் தொழிலாளர் பணவனுப்பல்கள் பெரிதும் பாதிப்படையக்கூடியதாகவுள்ளது. மத்திய கிழக்குப் பிராந்தியம் நாட்டிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக புலம்பெயர் தொழிலாளர்களில் ஆண்டுக்கு 80-90 சதவீதத்திற்கும் மொத்த பணவனுப்பல் பெறுகைகளில் அரைவாசிக்கும் மேலாக வகைகூறி இலங்கையின் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கான முதன்மை சந்தையாக உள்ளது. எனவே, 2015 முதல் பணவனுப்பல்களில் ஏற்பட்ட குறைந்தளவான போக்கானது மத்திய கிழக்கில் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியினொரு காரணமாக அமையலாம். அத்துடன், புலம்பெயர்ந்த ஊழியர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் கிடைக்காமை வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகளைத் தேடுவதிலிருந்து ஊழியர்களை ஊக்கமிழக்கச் செய்கின்றது. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றின் ஆரம்ப காலத்தில் சில தொழில்தருநர் புலம்பெயர் தொழிலாளர்களின் தொழிலினை நிறுத்தியமையினால் கொவிட்-19 புலம்பெயர் தொழிலாளர்களையும் பாதகமான முறையில் பாதித்துள்ளது. இத்தகைய தொழிலாளர்கள் கொவிட்-19 உடன் தொடர்புடைய பயணக் கட்டுப்பாடுகளினால் பல இன்னல்களுக்கு முகம்கொடுத்தனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் நோய்த்தொற்று காரணமாக வேலைவாய்ப்பை இழந்தாலும் கூட அவர்களுக்கு ஒரு குறைந்தபட்ச வருமானத்தை உறுதி செய்யக்கூடிய புலம்பெயர்ந்தவர்களுக்கான பங்களிப்புடன் கூடிய வேலை இழப்பு காப்பீட்டுத் திட்டம் மற்றும் தொழிலாளர்களுக்குத் தொடர்ச்சியான வருமானப் பாய்ச்சலை உறுதி செய்யக்கூடிய ஓய்வூதிய நன்மைத் திட்டம் போன்ற எந்தவொரு திட்டத்தையும் இலங்கை தற்போது செயற்படுத்தவில்லை.

உலகளாவிய ரீதியில் புலம்பெயர் தொழிலாளர்களின் பாரிய நெருக்கடிகளில் ஒன்றாக உயர் பணவனுப்பல் செலவுகள் காணப்படுகின்றன. நாடுகளுக்கிடையிலும், நாட்டிற்குள்ளும் சமத்துவமின்மையை குறைக்கின்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு 2030ஆம் ஆண்டிற்குள் பணவனுப்பல் செலவை 3 சதவீதமாகக் குறைப்பதற்கான இலக்கையும் ஐக்கிய நாடுகள் சபை வகுத்துள்ள 2030 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளும் உள்ளடக்குகின்றன. ஆயினும், உலகளாவிய ரீதியில் பணவனுப்பல் செலவானது சராசரியாக 6.51 சதவீதமாக காணப்படுவதால், இலக்கைக் காட்டிலும் அதிகமாகவுள்ளதுடன் சராசரியாக 4.88 சதவீத செலவான மிகக்குறைந்த செலவை கொண்ட பிராந்தியமாகத் தென்னாசியா காணப்படுகின்றது (உலக வங்கி, 2020).

வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான தற்போதைய சவால்களைச் சமாளிப்பதன் மூலம் நாட்டிற்குப் பணவனுப்பல் உட்பாய்ச்சல்களை அதிகரிக்கும் நோக்கில், அரசாங்கம் 2021 வரவுசெலவுத்திட்டத்தில் பல கொள்கை முயற்சிகளை அறிமுகப்படுத்தியது. வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக ஆற்றல் மிகுந்த தொழிலாளர்களை வழிநடாத்துவதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தையைப் பல்வகைப்படுத்துவதற்கும், புலம்பெயர்ந்த ஊழியர்களுக்குப் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதிய திட்டத்தை நிறுவுவதற்கும், உரிமம் பெற்ற வங்கிகளில் மாற்றப்படும் வெளிநாட்டு செலாவணி பணவனுப்பல்களுக்கு சாதாரண செலாவணி வீதத்தை விட ஒரு டொலருக்கு ரூ.2 செலுத்துவதற்குமான முன்மொழிவுகளை இவ்வழிமுறைகள் உள்ளடக்கின. மேலும், மத்திய வங்கியின் நாணயச் சபையுடன் கலந்தாலோசித்து, 2020ஆம் ஆண்டில் நாட்டிற்கு அதிகளவான உள்முக பணவனுப்பல்களைக் கவர்ந்து கொள்வதற்கு ஒரு சிறப்பு வைப்புக் கணக்குத் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. பணவனுப்பலை மேம்படுத்துதலை நோக்கமாகக் கொண்ட பரிந்துரைகளை முன்மொழிவதற்கு அரசாங்கமானது பிறதொடர்புடைய ஆர்வலர்களின் ஒத்துழைப்புடன் ஒரு பணிக்குழுவை நிறுவியுள்ளது.

**முன்னோக்கிய பார்வை**

படுகடனை ஏற்படுத்தாத வெளிநாட்டுச் செலாவணி மூலமாகக் கருதப்படும் பணவனுப்பல் உட்பாய்ச்சல்களின் முக்கியத்துவமானது, நோய்த்தொற்றின் முன்னிலையில் அதிகரித்துள்ளதுடன் பணவனுப்பல் பாய்ச்சலைத் தொடர்வதற்கான உடனடி நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கின்றது. வங்கித்தொழில் முறைக்கான கிடைப்பனவை மேம்படுத்துவதற்கு நிதியியல் உள்ளடக்கத்தினை ஊக்குவித்தல், போட்டித்தன்மையை வலுப்படுத்தல், நிதியியல் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்தல் போன்றவை பணவனுப்பல் செலவினைக் கணிசமானளவில் குறைப்பதுடன் பணவனுப்பலை அதிகரிக்கின்ற வேளையில் பணவனுப்பலின் பெரும் பங்கினை முறைசாரா ஊடகத்திலிருந்து முறைசார் நிதியியல் ஊடகத்திற்கு நகர்த்திச் செல்லும். இணையவழி மூலமாகப் பணம் அனுப்பும் முறைகள், செல்லிடத் தொலைபேசியுடனான பணப்பரிமாற்றம் மற்றும் நிதியியல் தொழில்நுட்பத்தினூடான மாற்றங்கள் போன்ற டிஜிட்டல் பணப் பரிமாற்றங்களை ஊக்குவித்தல் நடவடிக்கைகளும் கொடுக்கல்வாங்கல் செலவுகளைக் குறைப்பதற்குப் பங்களிக்கக்கூடும்.

பெரும்பாலும் எண்ணெய் விலைகளின் தளம்பல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களால் ஏற்படும் பொருளாதார நெருக்கடிகளுக்கு அடிக்கடி உட்படும் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தங்கியிருப்பதை காட்டிலும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மாற்று இடங்களைக் கண்டுபிடிப்பதற்கான கடுமையான தேவை காணப்படுகின்றது. இது தொடர்பாக, இலங்கையின் வெளிநாட்டு பணவனுப்பல்கள் பெருமளவில் ஒரேயொரு பிராந்தியத்திலிருந்து பெறப்படுவதைக் குறைப்பதற்கு புதிய தொழிலாளர் சந்தைகளை ஆராய்தல் மற்றும் சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட பிற முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களுடன் இருபுடை உடன்படிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகும். தொழில்சார் பயிற்சி மற்றும் பன்னாட்டு நியமங்களுக்கிசைவாக உயர்தரம் வாய்ந்த பயிற்சி வழங்கல் போன்றவற்றினூடான திறன் அபிவிருத்தி முதலீடுகளின் மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்குப் படிப்படியாக திறன் மேம்படுத்துகின்றமை உயர்ந்ததும் உறுதியானதுமான வருவாய்களுடன் தொழில்

5

வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் நன்மைபயக்கும். மேலும், புறப்பாட்டிற்கு முன்னரான பயிற்சித் திட்டங்களில் புலம்பெயர்ந்த ஊழியர்களின் மொழித்திறன், நிதியியல் சார்ந்த கல்வியறிவு மற்றும் கலாச்சார தயார்ப்படுத்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்பங்களின் மேம்பாட்டிற்காக பணவனுப்பல்களின் முறையான பயன்பாட்டை உறுதிசெய்வதற்குப் பணவனுப்பல் முகாமைத்துவம் தொடர்பாக இலங்கையில் உள்ள அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் முக்கியமானதாகும். மிக முக்கியமாக, விட்டுச்செல்லப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கு சிறுவர்களின் கல்விக்கு உதவுதல் போன்ற தொடர்ச்சியான கண்காணிப்பு முறைமைகள் மற்றும் ஏனைய வழிமுறைகளை ஆரம்ப மட்டத்தில் முன்னெடுப்பது அவசியமாகும். தொடர்புபட்ட அமைப்புக்களின் ஆதரவுடன் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிராந்திய அலுவலகங்கள் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்காக தொடர்ச்சியான கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம் அல்லது உளவள ஆலோசனைப் பணிகளை நிறுவுவதில் துணைபுரிய முடியும்.

நோய்த்தொற்றின் மூலம் எழுந்த பொருளாதார நெருக்கடி பணவனுப்பல் உட்பாய்ச்சல்களினதும் புலம்பெயர்ந்தோரின் நகர்வுகளினதும் அதேநேரக் கண்காணிப்பை மட்டுப்படுத்துகின்ற கணிசமான தரவு இடைவெளிகளை வெளிப்படுத்தியுள்ளது. இது தொடர்பில், உரிமம்பெற்ற வங்கிகளினூடாக நிறைவேற்றப்படும் ஓர் அனைத்தையுமுள்ளடக்கிய எல்லைகளுக்கிடையிலான மற்றும் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்களைக் கண்காணிக்கின்ற முறைமையான பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையை நடைமுறைப்படுத்தல் செயன்முறையில் இலங்கை மத்திய வங்கியானது ஈடுபட்டுள்ளது. எந்தவொரு புள்ளிவிபர வேறுபாடுகளை சரிசெய்வதற்கு உதவும் அதேவேளையில், தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் குறித்த பரந்த அளவிலான தரவுகளை மாத்திரமின்றி சென்மதிநிலுவை புள்ளிவிபரங்களை மேம்படுத்தவும் இது உதவும். நாடு, நாணயம், பணவனுப்பலைப் பெற்றுக்கொள்ளும் மாவட்டங்கள், பணம் அனுப்புபவரின் மூல குடியியல் விபரங்கள் மற்றும் பணவனுப்பல்களைப் பெறும் வங்கிகளின் அடிப்படையில் தொழிலாளர் பணவனுப்பலின் பிரிக்கப்பட்ட தரவுகளை பன்னாட்டு கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் முறைமையானது வழங்கும். இது, பணவனுப்பல்களின் பரம்பல் வளர்ந்து வரும் போக்குகளை சிறப்பாக மதிப்பிடுவதற்கும் உதவுவதுடன் பணவனுப்பல்களை உயர்த்துவதற்கான கொள்கைகளை உருவாக்குவதில் பயன்படும்.

வலுவான பொருளாதார வளர்ச்சியை அடைகின்ற அதேவேளையில் நாட்டின் வள இடைவெளியை நிரப்புவதற்கு வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் படுகடன் அல்லாத மூலங்கள் மற்றும் உட்பாய்ச்சல்களை உயர்த்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இந்த வகையில் சென்மதி நிலுவை பற்றாக்குறையை ஈடுசெய்தல், உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளுக்கு பங்களித்தல் மற்றும் பன்னாட்டு ஒதுக்கு மட்டங்களை உயர்த்தல் மற்றும் அதன்மூலம் நாட்டின் கொடுகடன் தகுதியை முன்னேற்றுவதுடன் வறுமையைக் குறைத்தல், சேமிப்பு மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதில் தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் முக்கிய பங்குவகிக்கின்றன. பொருளாதார வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் பணவனுப்பல்களின் சாதகமான விளைவுகளை உச்சப்படுத்துவதற்கு அரசாங்கத்தினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் பங்கு தொடர்புடைய அனைத்து ஆர்வலர்களின் கூட்டுமுயற்சியுடன் பணவனுப்பல் மற்றும் தொழிலாளர் புலம்பெயர்வு ஆகியவற்றை மலிவான, பாதுகாப்பான மற்றும் அதிக உற்பத்தித் திறன் மிக்கவகையில் மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

**உசாத்துணைகள்**

1. Maimbo, S.M. and Ratha, D. (Eds.) (2005). Remittances: Development impact and future prospects. Washington, DC: World Bank.
2. Ratha, D., De, S., Kim, E., Plaza, S., Seshan, G., and Yameogo, N. (2020). "Migration and Development Brief 33: Phase II: COVID-19 Crisis through a Migration Lens". Washington, DC: KNOMAD-World Bank
3. World Bank. (2019). "Leveraging Economic Migration for Development: A Briefing for the World Bank Board". Washington, DC: World Bank
4. World Bank. (2020). "Remittance Prices Worldwide". Washington, DC: World Bank

நடவடிக்கைகளின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகள் குறைந்த பங்கிலாபங்களைப் பிரகடனம் செய்தமையும் முதலாந்தரக் கணக்குப் பற்றாக்குறையில் ஏற்பட்ட குறைப்பிற்குச் சாதகமான முறையில் பங்களித்தன. நடுத்தர காலப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடனில் தங்கியிருப்பதனை மேலும் குறைப்பதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டிருப்பதன் காரணமாக முதலாந்தர வருமானக் கணக்கில் ஏற்பட்ட பற்றாக்குறை எதிர்காலத்தில் மேலும் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, முதலாந்தர வருமானக் கணக்கிற்கான உட்பாய்ச்சல் நியதிகளில், இவ்வாண்டுப்பகுதியின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2020இல் ஒதுக்குச் சொத்துக்களின் முதலீடுகள் மீதான வருவாய் வீழ்ச்சியடைந்தது.

### 5.2.4 இரண்டாந்தர வருமானம்

**தொழிலாளர் பணவனுப்பல்களில் காணப்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியின் காரணமாக 2020இல் இரண்டாந்தர வருமானக் கணக்கு வலுவடைந்தது.** முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இன் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் வளர்ச்சியொன்று பதிவுசெய்யப்பட்ட போதும், கொவிட்-19 உலகளாவிய தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர் நாடுகளுக்குத் திரும்பியமை, வெளிநாட்டிலுள்ள சில வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தப்பட்டமை அதேபோன்று தொழில்களுக்காக புதிதாகப் புறப்பட்டு செல்வது நிறுத்தப்பட்டமை என்பனவற்றின் காரணமாக 2020 மாச்சு மற்றும் மே மாதங்களில் பணவனுப்பல்கள் வீழ்ச்சியடைந்தன. எனினும், அதன் பின்னர் தொழிலாளர்களின் பணவனுப்பல்கள் தொடர்ச்சியாக அதிகரித்து 2019இன் 4.3 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 5.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தன.

இவ்வதிகரிப்பிற்கு, பெரும்பாலான பன்னாட்டு எல்லைகள் மூடப்பட்டமையின் காரணமாக புலம்பெயர் வேலையாட்கள் அதிகரித்த காலம் தங்கியிருக்க வேண்டியிருந்தமை, முறைமை சார்ந்த பணவனுப்பல் அதிகரித்தமை மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக அதிகரித்திருக்கக்கூடிய வாழ்க்கைச் செலவுகளைச் சமாளிப்பதற்காக இலங்கையிலுள்ள குடும்பங்களுக்கு புலம்பெயர்ந்த வேலையாட்களினால் அனுப்பப்பட்ட பணம் அதிகரித்திருக்கக்கூடிய சாத்தியம் என்பன காரணங்களாக இருக்கக்கூடும். அதேவேளை இவ்வாண்டுப்பகுதியில் இலங்கையில் வாழ்கின்ற வதிவற்றோரின் தனிப்பட்ட மாற்றல்கள் மற்றும் தொடர்பான கொடுப்பனவுகளும் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளின் காரணமாக இரண்டாந்தர வருமானக் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் 2019இல் ஐ.அ.டொலர் 5.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 6.2 பில்லியனுக்கு அதிகரித்தன.


## 5.3 மூலதனக் கணக்கு நிலுவை

**2020இல் மூலதனக் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் பெருமளவிற்கு மாற்றமின்றிக் காணப்பட்டன.** அரசாங்கத்திற்கான மூலதன மாற்றல்கள் சிறிதளவால் அதிகரித்த வேளையில் தனியார் துறைக்கான அத்தகைய மாற்றல்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. இதன் விளைவாக, மூலதனக் கணக்கு 2019இல் ஐ.அ.டொலர் 23 மில்லியன் கொண்ட மிகையுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 28 மில்லியன் கொண்ட மிகையினைப் பதிவுசெய்தது.

## 5.4 நிதியியல் கணக்கு

**சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கில் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் தேறிய நிதியியல் சொத்துக்களின் பங்கேற்பு இரண்டும் 2020இல் குறிப்பிடத்தக்க குறைப்பினைப் பதிவுசெய்தன.** தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள்

வரைபடம் 5.11
நிதியியல் கணக்கு




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 5.8 அ
நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத் துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத் துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் |
| **நிதியியல் கணக்கு** | **514** | **2,974** | **-1,825** | **-1,566** |
| **நேரடி முதலீடு** | **77** | **743** | **15** | **434** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப்பங்குகள் | 65 | 370 | 10 | 211 |
| வருவாய்களின் மீள் முதலீடு தவிர்ந்த பங்கு மூலதனம் | 52 | 110 | 7 | 20 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடி முதலீட்டாளர் | 52 | 110 | 7 | 20 |
| வருவாய்களின் மீள் முதலீடு | 13 | 260 | 3 | 191 |
| படுகடன் கருவிகள் | 13 | 374 | 4 | 223 |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சிகளில் நேரடிமுதலீட்டாளர் | 13 | 374 | 4 | 223 |
| **சொத்துப்பட்டியல் முதலீடு** | **-** | **2,313** | **-** | **-2,383** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | - | -4 | - | -217 |
| படுகடன் பிணையங்கள் | - | 2,317 | - | -2,166 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -250 | - | - |
| நீண்ட காலம் | - | -250 | - | - |
| பொது அரசாங்கம் | - | 2,567 | - | -2,166 |
| குறுங்காலம் (திறைசேரி உண்டியல்கள்) | - | 55 | - | -122 |
| நீண்ட காலம் | - | 2,513 | - | -2,044 |
| திறைசேரி முறிகள் | - | -388 | - | -431 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | - | 1 | - | 22 |
| நாட்டுக்கான முறிகள் | - | 2,900 | - | -1,635 |
| வழங்கல்கள் | - | 4,400 | - | - |
| உடமைகளின் முதிர்வுகள் | - | -1,500 | - | -859 |
| இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் | - | - | - | **-776** |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு** | **100** | **-82** | **-136** | **383** |
| நாணயமும் வைப்புக்களும் | -93 | 167 | 64 | -15 |
| மத்திய வங்கி | - | - | - | 400 |
| குறுங்காலம் | - | - | - | - |
| நீண்ட காலம் | - | - | - | 4.00 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -93 | 168 | 64 | -415 |
| குறுங்காலம் | 6 | 168 | 259 | -415 |
| நீண்ட காலம் | -99 | - | -194 | - |
| **பக்கம் XXX இல் தொடர்கிறது.** | | | | |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **வெளிநாட்டு நேரடி முதலீடுகள்** | | | | |
| பங்கு மூலதனம் | | 110 | | 20 |
| வருவாய்களின் மீள் முதலீடு | | 260 | | 191 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்கள் | | 391 | | 223 |
| கம்பனிகளுக்கிடையிலான கடன்களுக்கான மீள்கொடுப்பனவு | | -17 | | - |
| **மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1)** | | **743** | | **434** |
| முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் (2) | | 445 | | 236 |
| **முதலீட்டுச்சபை கம்பனிகளுக்கான கடன்கள் உள்ளடங்கலாக மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடு (1+2) (இ)** | | **1,189** | | **670** |
| **கொழும்பு பங்கு பரிவர்த்தனைக்கான மொத்த தேறிய உட்பாய்ச்சல்கள்** | | **-35** | | **-225** |
| நேரடி முதலீடுகள் | | -31 | | -9 |
| சொத்துப்பட்டியல் முதலீடுகள் | | -4 | | -217 |
| **ரூபாயில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) மீதான தேறிய வெளிநாட்டு முதலீடு** | | **-334** | | **-553** |
| வெளிநாட்டு கொள்வனவுகள் | | 596 | | 120 |
| வெளிநாட்டு விற்பனைகள் | | 930 | | 673 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) முதலீட்டு சபையின் மதிப்பீடுகளுடனான வித்தியாசம் விடயப்பரப்பு மற்றும் தொகுப்பு ஏதாவது முறைமைகளிலான வேறுபாட்டினாலானது.

*மூலம்*: இலங்கை மத்திய வங்கி

2019இல் ஐ.அ.டொலர் 2,974 மில்லியன் கொண்ட தேறிய அதிகரிப்பொன்றுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 1,566 மில்லியன் கொண்ட குறைப்பினைப் பதிவுசெய்தன. அதேவேளை, தேறிய சொத்துக்களின் கையேற்பு 2019இன் ஐ.அ.டொலர் 514 மில்லியன் கொண்ட சொத்துக்களின் அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 1,825 மில்லியன் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.

**2020இல் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தமைக்கு பங்குரிமை மூலதனம் மற்றும் படுகடன் இரண்டினதும் குறைந்த உட்பாய்ச்சல்கள் மற்றும் 2019 உடன் ஒப்பிடுகையில் படுகடன் தீர்ப்பனவுக் கொள்வனவுகளுக்கான உயர்ந்தளவு வெளிப்பாய்ச்சல் என்பனவே காரணமாகும்.** 2020இல் பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தமைக்கு ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் உயர்ந்த தேறிய வெளிப்பாய்ச்சல், நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முதிர்ச்சி, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ச்சல்கள், குறைந்தளவு வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உட்பாய்ச்சல்கள், அதேபோன்று இரண்டாந்தரச் சந்தையிலுள்ள வதிவற்றவர்களின் இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தேறிய விற்பனைகள் என்பன காரணங்களாக அமைந்தன. நிதியியல் கணக்கிற்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களாக 2020 மாச்சில் சீன அபிவிருத்தி வங்கியிலிருந்தான வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதி மற்றும் 2020 யூலையில் இந்திய றிசேர்வ் வங்கியினால் வழங்கப்பட்ட சார்க் நிதிய பரஸ்பர பரிமாற்றல் ஒழுங்குகளிலிருந்தான பெறுகைகள் காணப்பட்டன. நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உட்பட, வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2019இன் ஐ.அ.டொலர் 1,189 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 670 மில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் காணப்பட்ட மிதமான தன்மைக்கு உலகளாவிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2020இல் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்வதற்கு வழிவகுத்த கொவிட்-19 நோய்த்தொற்றுடன் தொடர்பான முதலீட்டின் நிச்சயமற்ற தன்மை முக்கிய காரணமாக அமைந்திருக்கக்கூடும். நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் நீங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் 2020இல் வீழ்ச்சியடைந்தன. 2020இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முக்கியமாக கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் வடிவிலும் தற்போதுள்ள வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கம்பனிகளிலிருந்தான மீள்முதலிடப்பட்ட வருவாய்களாகவும் காணப்பட்ட வேளையில் புதிய கம்பனிகளுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் சொற்ப அளவினதாகக் காணப்பட்டமைக்கு உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக ஏற்பட்ட முதலீடுகளின் நிச்சயமற்ற தன்மைகளும் பொதுவாக வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பாதித்த பயணக் கட்டுப்பாடுகளும் காரணங்களாக அமைந்தன. துறைவாரியான பகுப்பின்படி, முக்கியமான வெளிநாட்டு நேரடி முதலீடுகள், சொத்து அபிவிருத்திகள், தொலைத்தொடர்பூட்டல்கள்,



### அட்டவணை 5.8 ஆ
### நிதியியல் கணக்கு

ஐ.அ.டொ.மில்லியன்

| விடயம் | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் | நிதியியல் சொத்துக்களின் தேறிய கையகப் படுத்தல் | பொறுப் புக்களின் தேறிய உறப்படல் |
| **ஏனைய முதலீடு (பக்கம் XXX இலிருந்து தொடர்கிறது)** | | | | |
| கடன்கள் | - | -245 | - | 327 |
| மத்திய வங்கி | - | 327 | - | -14 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | - | 327 | - | -14 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | - | 327 | - | -14 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | - | -281 | - | 75 |
| குறுங்காலம் | - | -1 | - | 403 |
| நீண்ட காலம் | - | -280 | - | -328 |
| பொது அரசாங்கம் | - | -89 | - | 169 |
| நீண்ட காலம் | - | -89 | - | 169 |
| ஏனைய துறைகள் (இ) | - | -203 | - | 96 |
| நீண்ட காலம் | - | -203 | - | 96 |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் | -4 | -28 | -224 | 185 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | -8 | - | 9 | - |
| குறுங்காலம் | -8 | - | 9 | - |
| ஏனைய துறைகள் (ஈ) | 4 | -28 | -233 | 185 |
| குறுங்காலம் | 4 | -28 | -233 | 185 |
| ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள் | 196 | 24 | 24 | -114 |
| மத்திய வங்கி | - | 24 | - | -114 |
| குறுங்காலம் (உ) | - | 24 | - | -114 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 196 | - | 24 | - |
| குறுங்காலம் | 196 | - | 24 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | - | - | - | - |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **337** | **-** | **-1,704** | **-** |
| நாணய தங்கம் | -14 | - | -667 | - |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 6 | - | -5 | - |
| பா.நா. நிதியத்தில் ஒதுக்கு நிலைமை | - | - | - | - |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 346 | - | -1,032 | - |
| நாணயமும் வைப்புக்களும் | 361 | - | -177 | - |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | -174 | - | -1,092 | - |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | 535 | - | 914 | - |
| பிணையங்கள் | -19 | - | -856 | - |
| படுகடன் பிணையங்கள் | -19 | - | -856 | - |
| நீண்ட காலம் | -19 | - | -856 | - |
| ஏனைய கோரல்கள் | 3 | - | 1 | - |
| **நிதியியல் கணக்கு (தேறிய)** | **-2,460** | **-** | **-260** | **-** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| **அரசாங்கத்திற்கான நீண்டகால கடன்கள் (தேறிய)** | | **-89** | | **169** |
| உட்பாய்ச்சல்கள் (பகிர்ந்தளிப்புக்கள்) | | 1,573 | | 1,882 |
| செயற்திட்டக்கடன்கள் | | 1,573 | | 1,382 |
| வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதிகள் | | - | | 500 |
| மீள்கொடுப்பனவுகள் | | 1,662 | | 1,713 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) அரசுக்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகள் மற்றும் தனியார்துறை கம்பனிகளை உள்ளடக்குகின்றது.
(ஈ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக கொடுகடன்களை உள்ளடக்குகின்றது.
(உ) ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் தேறிய கொடுக்கல்வாங்கல்கள்

*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

புடவை மற்றும் சுற்றுலாவிடுதித் துறைகள் என்பனவற்றுடன் தொடர்பான செயற்றிட்டங்களினால் பெறப்பட்டிருந்தன. 2020இல் வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் மிதமான தன்மை காணப்பட்ட போதும், கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான சட்டவாக்க கட்டமைப்பு இறுதிப்படுத்தப்பட்டமை மற்றும் அண்மைக் காலங்களில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் காட்டிவரும் ஈடுபாடு என்பனவற்றின் காரணமாக குறிப்பாக, கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகச் செயற்றிட்டம் என்பன தொடர்பில் அண்மைக் காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கிறது. நேரடி முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் தவிர கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலுள்ள வெளிநாட்டு வதிவோர் முதலீடுகளை உள்ளடக்கிய பங்குரிமை மூலதனத்திலுள்ள சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2019இன் ஐ.அ.டொலர் 4 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 217 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. ஐ.அ.டொலர் 217 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல் இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான ஐ.அ.டொலர் 276 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களையும் முதலாந்தரக் சந்தைக்கான ஐ.அ.டொலர் 59 மில்லியன் கொண்ட உட்பாய்ச்சல்களையும் உள்ளடக்கியிருந்தது. 2020 ஒத்தோபரில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் முதிர்ச்சியடைந்தமை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட புதிய அளவீட்டிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி, நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் இரண்டாந்தரச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்களில் வதிவற்றோரினால் வதிவோருக்குச் செய்யப்பட்ட தேறிய விற்பனைகள் காரணமாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வடிவிலமைந்த சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2020இல் ஐ.அ.டொலர் 1,635 மில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்களவு தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்தன. அதேவேளை கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவாக மாற்றமடைந்து வருகின்ற உலளாவிய மூலதனப்பாய்ச்சல் இவ்வாண்டுப்பகுதியில் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 553 பில்லியன் கொண்ட கணிசமான தேறிய வெளிப்பாய்ச்சலுக்குக் காரணமாகியது. இதேவேளை, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் நாணயங்களும் வைப்புப் பொறுப்புக்களும் வீழ்ச்சியடைந்தன. 2021 பெப்புருவரியில் முதிர்ச்சியடைந்த 2020 யூலையில் கிடைக்கப்பெற்ற ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் நிதிய பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றமையின் காரணமாக மத்திய வங்கியின் நாணயம் மற்றும் வைப்புப் பொறுப்புக்கள் அதிகரித்தன. வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களினால் பெறப்பட்ட தேறிய கடன்கள் 2020இல் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. மேலும், 2020 மாச்சில் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதியுடன் 2020இல் அரசாங்கத்தின் தேறிய வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் பதிவுசெய்யப்பட்டன. வெளிநாட்டுக் கடன்கள், நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் போன்ற வடிவங்களில் அமைந்த அரசாங்கத்தின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் இவ்வாண்டுப்பகுதியில் தேறிய வெளிப்பாய்ச்சலைப் பதிவுசெய்து வெளிநாட்டு நிதியிடல் நியதிகளில் அரசாங்கத்தினால் எதிர்நோக்கப்பட்ட தடைகளை எடுத்துக்காட்டின. வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் தேறிய நிகழத்தக்க பொறுப்புக்கள் 2020இல் அதிகரித்தன. மேலும், முக்கியமாக மத்திய வங்கியினால் முகாமைப்படுத்தப்படும் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பொறுப்புக்களை உள்ளடக்கிய ஏனைய செலுத்தத்தக்க கணக்குகள் 2020இல் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

அட்டவணை 5.9
2020 இல் வெளிநாட்டுக் கடன் பெறுகைகளின் மூலம் நிதியிடப்பட்ட பிரதான செயற்றிட்டங்கள்

| கடன் வழங்குநரும் செயற்றிட்டங்களும் | பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை ஐ.அ.டொ.மில் |
|---|---|
| **அரசாங்க செயற்றிட்டங்கள் - மொத்தம்** | **1,382** |
| இதில், | |
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | **305** |
| இதில், | |
| இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - தொகுதி 1 மற்றும் தொகுதி 2 | 68 |
| **சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | **266** |
| இதில், | |
| தெற்கு விரைவுப் பாதையின் விரிவாக்க செயற்றிட்டம் | 149 |
| அம்பாந்தோட்டை மைய அபிவிருத்தி செயற்றிட்டம் (தெற்கு விரைவுப்பாதையின் விரிவாக்க செயற்றிட்டம் - பகுதி 3) | 40 |
| **பன்னாட்டு அபிவிருத்தி சபை** | **253** |
| இதில், | |
| கொவிட் - 19 அவசரகால பதிலிறுத்தல் மற்றும் நல முறைமைகளின் தயார்நிலை செயற்றிட்டம் | 72 |
| சமூக பாதுகாப்பு வலைத்திட்ட செயற்றிட்டம் | 50 |
| வேளாண்மை சபை நவீன மயமாக்கல் செற்றிட்டம் | 19 |
| **யப்பானிய அரசாங்கம்** | **161** |
| இதில், | |
| களனி ஆற்றிற்கு மேலான புதிய பாலக் கட்டுமானச் செயற்றிட்டம் | 72 |
| கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ செயற்றிட்டம் | 24 |
| பெரும்பாக கொழும்பு கடத்தல் மற்றும் வழங்கல் இழப்புகளை குறைத்தல் செயற்றிட்டம் | 15 |
| **எச்.எஸ். பி.பி. லிமிடெட் (கொங்கொங்)** | **89** |
| இலங்கைப் புகையிரதத்தின் மலை நாட்டு பாதை தொழிற்பாட்டிற்காக டீசல் பல அலகுகளின் கொள்வனவு | 59 |
| இலங்கையின் தெரிந்தெடுக்கப்பட்ட வைத்தியசாலைகளின் நல வசதிகளை தரமுயர்த்தல் | 30 |
| **கல்யொன் வேளாண்மைக் கடன்** | **74** |
| பெரும்பாக மாத்தளை நீர் வழங்கல் செயற்றிட்டம் | 43 |
| களனி வலது கிளை நீர் வழங்கல் செயற்றிட்டம் - இரண்டாம் கட்டம் | 31 |
| **புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான பன்னாட்டு வங்கி** | **70** |
| இதில், | |
| மெட்ரோ கொழும்பு நகர அபிவிருந்திச் செயற்றிட்டம் | 32 |
| ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையின் வலுப்படுத்தல் செயற்றிட்டம் | 24 |
| **இந்திய அரசாங்கம்** | **39** |
| இதில், | |
| வடக்கு புகையிரதப் பணிகளினை மீளக் கட்டியெழுப்புதல் | 38 |
| **இந்திய ஏற்றுமதி இறக்குமதி வங்கி** | **17** |
| புகையிரதத் துறையினை அபிவிருத்தி செய்வதற்கான கொடுகடன் வசதி | 17 |

*மூலம்:* நிதி அமைச்சு

**நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு 2020இல் வீழ்ச்சியடைந்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** நிதியியல் சொத்துக்களின் தேறிய கையேற்பு, 2019இன் ஐ.அ.டொலர் 514 மில்லியன் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 1,825 மில்லியனால் வீழ்ச்சியடைந்தது. நிதியியல் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு அரசாங்கத்திற்கு மிதமான வெளிநாட்டு நிதியிடல் கிடைத்தமைக்கிடையிலும் இக்காலப்பகுதியில் அரசாங்கத்தின் சார்பில் கணிசமான வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டமையின் காரணமாக 2020இல் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 1,704 மில்லியனால் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டுப்பகுதியில் ஒதுக்கு தொடர்பான கொடுக்கல்வாங்கல்கள், மத்திய வங்கியின் நாணயத் தங்க சொத்துக்களின் குறிப்பிடத்தக்க உபாயக் குறைப்புக்களினால் ஏற்பட்டிருக்கின்றன. வங்கித்தொழில் துறையின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்புக்களும் 2020இல் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. அதேவேளை, இலங்கை ஏற்றுமதியாளர்களினால் வெளிநாட்டு வர்த்தகப் பங்காளர்களுக்கு வழங்கப்பட்ட வர்த்தக கொடுகடன்களையும் முற்பணங்களையும் பிரதிபலிக்கின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்கள் மீதான சொத்துக்களின் தேறிய கையேற்பும் இவ்வாண்டுப் பகுதியில் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் பெறத்தக்க ஏனைய கணக்குகள் இவ்வாண்டுப்பகுதியில் ஒரு சிறிதளவான அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

## 5.5 திரண்ட நிலுவை

**தேறிய பன்னாட்டு ஒதுக்குகளிலான மாற்றத்திற்குச் சமமானதாக விளங்கும் திரண்ட நிலுவை 2019இல் பதிவுசெய்யப்பட்ட மிகையினைத் தொடர்ந்து 2020இல் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது.** இவ்வாண்டுப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கு ஏற்பட்ட மிதமான உட்பாய்ச்சல்கள் மற்றும் குறிப்பிடத்தக்களவு வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் என்பன இவ்வாண்டுப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைய வழிவகுத்தன. தேறிய பன்னாட்டு ஒதுக்குகளும் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிகளைப் பதிவுசெய்து திரண்ட நிலுவை ஐ.அ.டொலர் 2,328 மில்லியன் கொண்ட பற்றாக்குறையினைப் பதிவுசெய்ய வழிவகுத்தன.

## 5.6 பன்னாட்டு முதலீட்டு நிலைமை

**வதிவற்றோருடன் வைத்திருக்கப்பட்ட மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களுக்கும் பொறுப்பு நிலைமைகளுக்குமிடையிலான வேறுபாடாக விளங்கும் இலங்கையின் தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை 2020இல் மேம்பட்டது.** இதற்கமைய, பன்னாட்டு

### அட்டவணை 5.10
### பன்னாட்டு முதலீட்டு நிலைமை

ஐ.அ.டொ.மில்லியன்
(கால முடிவிலான நிலைமை)

| வகை | 2019 (அ) | | 2020 (ஆ) | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| **நேரடி முதலீடு (இ)** | **1,497** | **13,065** | **1,509** | **13,832** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | 1,466 | 8,287 | 1,473 | 8,831 |
| படுகடன் கருவிகள் | 31 | 4,778 | 36 | 5,001 |
| **சொத்துப்பட்டியல் முதலீடுகள்** | **-** | **15,855** | **-** | **8,420** |
| பங்கு மூலதனம் மற்றும் முதலீட்டு நிதியப் பங்குகள் | | 1,049 | | 708 |
| ஏனைய துறைகள் | | 1,049 | | 708 |
| படுகடன் பிணையங்கள் (ஈ) | - | 14,806 | - | 7,712 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | | | |
| குறுங்காலம் | - | | - | |
| பொது அரசாங்கம் | - | 14,632 | - | 7,616 |
| குறுங்காலம் | | 119 | | 4 |
| நீண்ட காலம் | | 14,513 | | 7,613 |
| ஏனைய துறைகள் | | 174 | | 96 |
| நீண்ட காலம் | | 174 | | 96 |
| **நிதியியல் பெறுதிகள்** | **-** | **-** | **-** | **-** |
| **ஏனைய முதலீடு** | **3,846** | **35,227** | **3,710** | **36,499** |
| **நாணயமும் வைப்புக்களும்** | **771** | **1,748** | **835** | **1,734** |
| மத்திய வங்கி | | | | 400 |
| குறுங்காலம் | | - | | - |
| நீண்ட காலம் | | - | | 400 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 771 | 1,748 | 835 | 1,333 |
| குறுங்காலம் | 363 | 1,748 | 622 | 1,333 |
| நீண்ட காலம் | 408 | | 214 | |
| **கடன்கள்** | | **30,320** | | **31,512** |
| மத்திய வங்கி | | 1,315 | | 1,378 |
| ப.நா.நி. உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | | 1,315 | | 1,378 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | | 5,249 | | 5,324 |
| குறுங்காலம் | | 3,771 | | 4,174 |
| நீண்ட காலம் | | 1,478 | | 1,150 |
| பொது அரசாங்கம் | | 19,617 | | 20,570 |
| நீண்ட காலம் | | 19,617 | | 20,570 |
| ஏனைய துறைகள் (உ) | | 4,139 | | 4,240 |
| நீண்ட காலம் | | 4,139 | | 4,240 |
| **வர்த்தக கொடுகடன்கள் மற்றும் முற்பணங்கள்** | **1,178** | **2,156** | **954** | **2,341** |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 92 | | 101 | |
| குறுங்காலம் | 92 | | 101 | |
| ஏனைய துறைகள் (ஊ) | 1,086 | 2,156 | 853 | 2,341 |
| குறுங்காலம் | 1,086 | 2,156 | 853 | 2,341 |
| **ஏனைய பெறத்தக்க/ கொடுபடத்தக்க கணக்குகள்** | **1,896** | **456** | **1,920** | **343** |
| மத்திய வங்கி (எ) | | 456 | | 343 |
| குறுங்காலம் | | 456 | | 343 |
| வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 1,896 | | 1,920 | |
| குறுங்காலம் | 1,896 | | 1,920 | |
| **சிறப்பு எடுப்பனவு உரிமைகள்** | | **547** | | **570** |
| **ஒதுக்குச் சொத்துக்கள்** | **7,642** | | **5,664** | |
| நாணய தங்கம் | 955 | | 409 | |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் | 7 | | 3 | |
| ப.நா.நி. இல் ஒதுக்கு நிலைமை | 66 | | 69 | |
| ஏனைய ஒதுக்குச் சொத்துக்கள் | 6,614 | | 5,184 | |
| நாணயமும் வைப்புக்களும் | 2,387 | | 2,210 | |
| நாணய அதிகார சபைகள் மீதான கோரல்கள் | 1,952 | | 861 | |
| ஏனைய நிறுவனங்கள் மீதான கோரல்கள் | 435 | | 1,350 | |
| பிணையங்கள் | 4,227 | | 2,974 | |
| படுகடன் பிணையங்கள் | 4,227 | | 2,974 | |
| **மொத்த சொத்துக்கள்/பொறுப்புக்கள்** | **12,985** | **64,148** | **10,883** | **58,750** |
| **தேறிய பன்னாட்டு முதலீட்டு நிலைமை** | | **-51,162** | | **-47,868** |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | | | |
| பமுறி-முதிர்ச்சி அடிப்படையிலான பகுப்பாய்வு | 12,985 | 64,148 | 10,883 | 58,750 |
| குறுங்காலம் | 6,846 | 9,299 | 6,184 | 8,902 |
| நீண்ட காலம் | 6,139 | 54,849 | 4,699 | 49,848 |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானது

(இ) முதலீட்டு சபை, கொழும்புப் பங்கு பரிவர்த்தனை மற்றும் ஏனைய தனியார் கம்பனிகளின் நேரடி முதலீட்டு நிலைமைகளினை உள்ளடக்குகின்றது.

(ஈ) உள்நாட்டு நாணய வழங்கல்கள் புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட அதேவேளை வெளிநாட்டு நாணய படுகடன் வழங்கல்கள் சந்தைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

(உ) அரசிற்கு சொந்தமான வியாபார தொழில் முயற்சிகளால் பெறப்பட்ட செயற்திட்ட கடன்களின் வெளிநின்ற நிலைகளை உள்ளடக்குகின்றது.

(ஊ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகள் என்பவற்றின் வெளிநின்ற வர்த்தக கொடுகடன் நிலைமையை உள்ளடக்குகின்றது.

(எ) மத்திய வங்கியினால் முகாமைத்துவம் செய்யப்படும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்களின் வெளிநின்ற நிலைமை

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

முதலீட்டு நிலைமை 2019 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 51.2 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமைகளிலிருந்து 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 47.9 பில்லியன் கொண்ட தேறிய பொறுப்பு நிலைமைக்கு மேம்பட்டது. இது, நாட்டின் வெளிநாட்டு பொறுப்பு நிலைமை 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 64.1 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 58.8 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்த வேளையில் நாட்டின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 13.0 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 10.9 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையின் விளைவாகும்.

**வதிவற்றோருடனான இலங்கையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமை 2020ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** வெளிநாட்டுச் சொத்துக்களின் இருப்பு நிலைமை வீழ்ச்சியடைந்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019[1] இறுதியின் ஐ.அ.டொலர் 7.6 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகளும் 2020இல் வீழ்ச்சியடைந்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்த வேளையில் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களின் உடமைகள் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. அதேவேளை, வதியும் இலங்கையர்களினால் வெளிநாடுகளில் வைத்திருக்கப்படும் நேரடி முதலீடுகளைப் பிரதிபலிக்கின்ற நேரடி முதலீட்டுச் சொத்து நிலைமை இவ்வாண்டுப்பகுதியில் சிறிதளவால் அதிகரித்தது. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களின் நாணயம் மற்றும் வைப்புக்கள் மற்றும் ஏனைய பெறத்தக்க கணக்குகள் வடிவிலுள்ள சொத்து நிலைமை 2020இல் அதிகரித்து 2020ஆம் ஆண்டுப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தது. அதேவேளையில் 2020ல் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்களினாலும் தனியார் துறையினாலும் வதிவற்றோருக்கு வழங்கப்பட்ட வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களைப் பிரதிபலிக்கின்ற வர்த்தகக் கொடுகடன் மற்றும் முற்பணங்களின் வெளிநின்ற சொத்து நிலைமை 2019 இறுதியில் அவதானிக்கப்பட்ட நிலைமையிலிருந்து வீழ்ச்சியடைந்தது.

**பன்னாட்டு முதலீட்டு நிலைமையில் பிரதிபலிக்கப்பட்டவாறு, வதிவற்றோருக்கான இலங்கையின் மொத்தப் பொறுப்பு நிலைமை 2020 இறுதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தமைக்கு இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மதிப்பில் ஏற்பட்ட குறைப்பும் அதேபோன்று வதிவோரின் உடமையாக இலங்கையின் நாட்டிற்கான பன்னாட்டு முறி உடமைகளின் ஒரு பகுதி மீள்வகைப்படுத்தப்பட்டமையும் முக்கிய காரணங்களாகும்.** மொத்தப் பொறுப்பு நிலைமை 2019 இறுதியின் ஐ.அ.டொலர் 64.1 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 58.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சிக்கு கொவிட்-19 உலகளாவிய நோய்ப்பரம்பலினால் மிகைப்படுத்தப்பட்ட பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளினாலும் இலங்கையின் நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையினாலும் தூண்டப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் உயர்ந்த இரண்டாந்தரச் சந்தை விளைவுகளிற்கு இசைவாக அரசாங்கத்தின் வெளிநின்ற நாட்டிற்குரிய பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளிலான குறைப்பின் விளைவாக முக்கியமாக சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காரணமாகும். மேலும், வதியும் நிறுவனங்களினால் வைத்திருக்கப்படும் இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீது இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட புதிய அளவீட்டின் அடிப்படையில் 2019 மற்றும் 2020 இறுதியில் உள்நாட்டுப் பொறுப்புக்களாக நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒரு பகுதியை மீள்வகைப்படுத்தியமையும் 2020 இறுதியில் சொத்துப்பட்டியல் முதலீட்டு பொறுப்பு நிலைமை குறைவடைவதற்குப் பங்களித்ததுடன் 2019 இறுதியில் நிலைமை திருத்தியமைக்கப்பட்டது. மேலும், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையிலிருந்தும் அதேபோன்று கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தும் வெளிநாட்டு முதலீடுகள் வெளிச்சென்றமையும் சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமையின் வீழ்ச்சிக்குப் பங்களித்தது. இவ்வபிவிருத்திகளின் விளைவாக, வெளிநின்ற சொத்துப்பட்டியல் முதலீட்டுப் பொறுப்பு நிலைமை 2019 இறுதியில் ஐ.அ.டொலர் 15.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 8.4 பில்லியனாகக் காணப்பட்டது. எனினும், ஆண்டு காலத்தில் தேறிய நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்களின் காரணமாக நேரடி முதலீட்டு பொறுப்பு நிலைமை 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 13.8 பில்லியனுக்கு அதிகரித்தது. மேலும், நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளின் படுகடன் சாதனங்களினது பொறுப்பு நிலைமை அதிகரித்து, நேரடி முதலீட்டாளர்களினால் வழங்கப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. பன்னாட்டு முதலீட்டு நிலைமையின் வெளிநாட்டுக் கடன் பொறுப்பு நிலைமை 2020 இறுதியில் அதிகரித்தமைக்கு அரசாங்கம், மத்திய வங்கி, வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறை கூட்டுத்தாபனங்களையும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளையும் உள்ளடக்கிய ஏனைய துறைகளின் வெளிநாட்டு கடன் பொறுப்புக்களில் ஏற்பட்ட

1 ஒதுக்குச் சொத்து நிலைமையின் விபரமான பகுப்பாய்விற்கு பிரிவு 5.6.1 இனைப் பார்க்கவும்.

மிதமான அதிகரிப்புக்கள் பங்களித்தன. சார்க் நிதியத்தின் பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளுடன் மத்திய வங்கியின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்பு நிலைமை 2020 இறுதியில் அதிகரித்த போதும் வதிவற்றோரின் வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்ளின் நாணய மற்றும் வைப்புப் பொறுப்புக்களின் நிலைமை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்ததனால் மொத்த நாணய மற்றும் வைப்புப் பொறுப்புக்களின் நிலைமை சிறிதளவில் வீழ்ச்சியடைந்தது. மேலும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் பெறப்பட்ட வர்த்தகக் கொடுகடனில் குறைப்புக் காணப்பட்டமைக்கிடையிலும் இலங்கை இறக்குதியாளர்களினால் பெறப்பட்ட வெளிநின்ற வர்த்தகக் கொடுகடன்கள் அதிகரித்த வேளையில், மத்திய வங்கியின் ஆசிய தீர்ப்பனவு ஒன்றியத்துடன் தொடர்பான பொறுப்புக்கள் வீழ்ச்சியடைந்தமையுடன் ஏனைய கொடுபடத்தக்க கணக்குகளின் வெளிநின்ற நிலைமையானது 2020இல் வீழ்ச்சியடைந்தது.

## 5.6.1 ஒதுக்குச் சொத்து நிலைமை

**2020 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2019 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 7.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, குறைவடைந்த உட்பாய்ச்சல்களுக்கு மத்தியிலும் அரசாங்கத்தின் கணிசமான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளே காரணமாக அமைந்தது.** ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவினை உள்ளடக்கிய வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள், வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களின் முதன்மைக் கொடுப்பனவுகள், வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதியுடன் தொடர்பான மீள்கொடுப்பனவுகள், இலங்கை அபிவிருத்தி முறிகள், கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுடன் தொடர்பான கடன் மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பன இவ்வாண்டுக் காலத்தில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைய வகைகூறின. இவ்வாண்டுக் காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை நிறைவாக்கிய முக்கிய உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதி, ஐ.அ.டொலர் 720 மில்லியன் கொண்ட கரைகடந்த வங்கித்தெரில் பிரிவுக் கடன்கள் மற்றும் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் நிதிய பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இதற்கமைய, ஆண்டு இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்கு மட்டம் 4.2 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகவும் எஞ்சியுள்ள முதிர்ச்சியின் அடிப்படையில் நாட்டின் குறுங்கால படுகடன் மற்றும் பொறுப்புக்களின் 43 சதவீதமாகவும் இருந்தது.



அட்டவணை 5.11
மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்,
மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் திரண்ட நிலுவை

ஐ.அ.டொலர் மில்லியன்


| விடயம் | கால இறுதியிலான நிலைமை | | | | |
|---|---|---|---|---|---|
| | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 (அ) |
| 1. அரசின் வெளிநாட்டு சொத்துக்கள் | 289 | 488 | 817 | 386 | 155 |
| 2. மத்திய வங்கியின் வெளிநாட்டு சொத்துக்கள் | 5,730 | 7,470 | 6,102 | 7,256 | 5,510 |
| 3. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (1+2) | 6,019 | 7,959 | 6,919 | 7,642 | 5,664 |
| 4. வைப்புக்களை ஏற்கும் கூட்டுத் தாபனங்களின் வெளிநாட்டு சொத்துக்கள் | 2,414 | 2,478 | 2,664 | 2,760 | 2,856 |
| 5. மொத்த வெளிநாட்டு சொத்துக்கள் (3+4) (ஆ) | 8,433 | 10,436 | 9,583 | 10,402 | 8,521 |
| 6. ஒதுக்குடன் தொடர்புடைய பொறுப்புக்கள் (இ) | 1,490 | 1,361 | 1,425 | 1,771 | 2,121 |
| 7. தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் (3-6) | 4,529 | 6,597 | 5,495 | 5,871 | 3,543 |
| 8. திரண்ட நிலுவை (ஈ) | -500 | 2,068 | -1,103 | 377 | -2,328 |
| 9. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மாதங்களின்படி | | | | | |
| 9.1 பொருட்களின் இறக்குமதிகள் | 3.8 | 4.6 | 3.7 | 4.6 | 4.2 |
| 9.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 3.1 | 3.8 | 3.1 | 3.7 | 3.7 |
| 10. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் மாதங்களின்படி | | | | | |
| 10.1 பொருட்களின் இறக்குமதிகள் | 5.3 | 6.0 | 5.2 | 6.3 | 6.4 |
| 10.2 பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 4.3 | 4.9 | 4.3 | 5.1 | 5.6 |

(அ) தற்காலிகமானது
(ஆ) ‘வெளிநாட்டில் நேரடி முதலீடு’ மற்றும் ‘வழங்கப்பட்ட வர்த்தக்கடன் மற்றும் முற்பணங்கள்’ வடிவிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் நீங்கலாக
(இ) வெளிநின்ற சிறப்பு எடுப்பனவு உரிமைகள் நீங்கலாக மத்திய வங்கியின் மொத்த வெளிநின்ற படுகடன்
(ஈ) ஆண்டுக்காலப்பகுதியில் தேறிய பன்னாட்டு ஒதுக்கு நிலைமையின் மாற்றம்

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளையும் வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்களையும் உள்ளடக்கிய மொத்த பன்னாட்டு ஒதுக்குகளும் 2020 இறுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கிய காரணமாக அமைந்த

வரைபடம் 5.12
காலாண்டுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

வேளையில் வர்த்தக வங்கிகள் வசமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் மிதமான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன. 2020 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 6.4 மாத இறக்குமதிகளுக்குச் சமமானதாகக் காணப்பட்டன.

## 5.7 வெளிநாட்டுப் படுகடன் மற்றும் படுகடன் தீர்ப்பனவுகள்

### 5.7.1 வெளிநாட்டுப் படுகடன்

**2020இல் இலங்கையின் வெளிநின்ற படுகடன் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது.** வர்த்தகப்படுத்தத்தக்க படுகடன் சாதனங்களின் சந்தைப் பெறுமதியினை அடிப்படையாக் கொண்ட நாட்டின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு நிலைமை 2019 இறுதியின் ஐ.அ.டொலர் 54.8 பில்லியனிலிருந்து 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 49.2 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி, 2020 ஒத்தோபரில் முதிர்ச்சியடைந்த நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவுகள், வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் ஒரு பகுதியை உள்நாட்டுப் பொறுப்புக்களாக மீள்வகைப்படுத்தியமை மற்றும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் வதிவற்றோர் உடைமைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. 2017இல் பெறப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணயக் கால நிதியிடல் வசதி, 2020 மேயில் இறுதித் தவணைப் பணமான ஐ.அ.டொலர் 333 மில்லியனைச் செலுத்தியதன் மூலம் முழுமையாக மீளச்செலுத்தப்பட்டது. இத்தகைய அபிவிருத்திகளுடன் அரசாங்கத்தின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2019இறுதியின் ஐ.அ.டொலர் 34.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் ஐ.அ.டொலர் 28.2 பில்லியனுக்குக் கணிசமாகக் குறைவடைந்தது. எனினும், இக்கணிப்பினைப் பெற்றுக்கொள்வதற்குப் பரிசீலனையில் கொள்ளப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் குறைப்பு காணப்பட்டமைக்கிடையிலும் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் உண்மையான பொறுப்பு அவற்றின் முகப்புப் பெறுமதியில் தொடர்ந்தும் உயர்வாகக் காணப்படுகின்றமை முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும். அதேவேளை, மத்திய வங்கியின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் அதிகரித்தமைக்கு இந்திய றிசேர்வ் வங்கியிலிருந்தான ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் நிதிய பரஸ்பர பரிமாற்றல் ஏற்பாடுகளே காரணமாகும். வங்கித்தொழில் துறையின் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2019 இறுதியுடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு வங்கிகளினால் பெறப்பட்ட

அட்டவணை 5.12
வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் நிலை


ஐ.அ.டொ.மில்லியன்
(கால இறுதியிலான நிலைமை)

| வகை | 2019(அ) | 2020(ஆ) |
|---|---|---|
| **பொது அரசாங்கம்** | **34,249** | **28,187** |
| **குறுங்காலம்** | **119** | **4** |
| படுகடன் பிணையங்கள் | 119 | 4 |
| திறைசேரி உண்டியல்கள் (இ) | 119 | 4 |
| **நீண்ட காலம்** | **34,130** | **28,183** |
| படுகடன் பிணையங்கள் | 14,513 | 7,613 |
| திறைசேரி முறிகள் (இ) | 406 | 31 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் (ஈ) | 5 | 27 |
| நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (உ) | 14,102 | 7,555 |
| கடன்கள் | 19,617 | 20,570 |
| **மத்திய வங்கி** | **2,318** | **2,690** |
| **குறுங்காலம்** | **456** | **343** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | ... | ... |
| ஏனைய கொடுபடத்தக்க கணக்குகள் | 456 | 343 |
| ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பொறுப்புக்கள் | 456 | 343 |
| **நீண்ட காலம்** | **1,862** | **2,348** |
| சிறப்பு எடுப்பனவு உரிமை ஒதுக்குகள் | 547 | 570 |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் | - | 400 |
| கடன்கள் | 1,315 | 1,378 |
| ப.நா.நி உடனான கொடுகடன் மற்றும் கடன்கள் | 1,315 | 1,378 |
| விரிவாக்கப்பட்ட நிதிய வசதி | 1,315 | 1,378 |
| **வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள்** | **6,997** | **6,657** |
| **குறுங்காலம்** | **5,519** | **5,507** |
| நாணயம் மற்றும் வைப்புக்கள் (ஊ) | 1,748 | 1,333 |
| வர்த்தக வங்கிகள் | 1,748 | 1,333 |
| கடன்கள் | 3,771 | 4,174 |
| வர்த்தக வங்கிகள் | 3,771 | 4,174 |
| **நீண்ட காலம்** | **1,478** | **1,150** |
| கடன்கள் | 1,478 | 1,150 |
| வர்த்தக வங்கிகள் | 1,412 | 1,109 |
| ஏனைய வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 66 | 41 |
| **ஏனைய துறைகள் (எ)** | **6,469** | **6,676** |
| **குறுங்காலம்** | **2,156** | **2,341** |
| வர்த்தக கொடுகடன் மற்றும் முற்பணங்கள் (ஏ) | 2,156 | 2,341 |
| **நீண்ட காலம்** | **4,313** | **4,335** |
| படுகடன் பிணையங்கள் (உ) | 174 | 96 |
| கடன்கள் | 4,139 | 4,240 |
| தனியார் துறை கூட்டுத்தாபனங்கள் | 2,235 | 2,458 |
| அரசிற்கு சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளும் அரச கூட்டுத்தாபனங்களும் | 1,904 | 1,781 |
| **நேரடி முதலீடு : கம்பனிகளுக்கிடையிலான கடன் வழங்கல் (ஐ)** | **4,778** | **5,001** |
| **மொத்த வெளிநாட்டு படுகடன் நிலைமை** | **54,811** | **49,212** |
| **மொ.உ.உ. சதவீதமாக** | | |
| மொத்த வெளிநாட்டு படுகடன் | 65.3 | 60.9 |
| குறுங்கால படுகடன் | 9.8 | 10.1 |
| நீண்டகால படுகடன் | 55.5 | 50.8 |
| **மொத்த வெளிநாட்டு படுகடனின் சதவீதமாக** | | |
| குறுங்கால படுகடன் | 15.1 | 16.7 |
| நீண்டகால படுகடன் | 84.9 | 83.3 |
| **ஞாபகார்த்த விடயங்கள்** | | |
| **படுகடன் பிணையங்கள்-முகப்பெறுமதியில் துறைவாரியான பகுப்பாய்வு** | **14,690** | **12,058** |
| பொது அரசாங்கம் | 14,515 | 11,883 |
| திறைசேரி உண்டியல்கள் | 131 | 4 |
| திறைசேரி முறிகள் | 442 | 33 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 5 | 27 |
| நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் | 13,937 | 11,820 |
| ஏனைய துறைகள் | 175 | 175 |
| **நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் முகப்பெறுமதி** | **15,050** | **14,050** |
| வதிவற்றோரினால் வைத்திருக்கப்படும் நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் | 13,937 | 11,820 |
| வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்படும் வெளிநின்ற நாட்டுக்கான பன்னாட்டு முறிகள் (2019 திசெம்பரில் முதல் வெளிநாட்டுப் படுகடன் புள்ளிவிபரங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளன) | 1,113 | 2,230 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) புத்தகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(ஈ) முகப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டது
(உ) சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டது
(ஊ) வெளிநாட்டு நாணயங்களை வைத்திருக்கும் வதிவற்றோரின் வைப்புக்களை உள்ளடக்கியுள்ளது
(எ) தனியார் துறை மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகளை உள்ளடக்கியுள்ளது
(ஏ) இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் தனியார் துறை கம்பனிகளின் வெளிநின்ற வர்த்தக கொடுகடனை உள்ளடக்கியுள்ளது
(ஐ) முதலீட்டுச்சபையில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் கம்பனிகளுக்கிடையிலான கடன் பெறுகைகள் மற்றும் பங்குதாரர் முற்பணங்கள் உள்ளடங்கலாக

*மூலம் :* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.13
வெளிநாட்டுப் படுகடன்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

குறுங்கால வெளிநாட்டுப் படுகடன்களில் அதிகரிப்புக் காணப்பட்ட போதும் நாணயம் மற்றும் வைப்புக்கள் மற்றும் நீண்ட கால வெளிநாட்டுக் கடன்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு காரணமாக அமைந்தது. அத்துடன், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிநாட்டுக் கடன்களில் மிதமான குறைப்பு காணப்பட்ட போதும் தனியார் துறையினால் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் வெளிநின்ற வர்த்தக் கொடுகடன்களில் ஏற்பட்ட அதிகரிப்புடன் தனியார் துறையினதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினதும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2020இல் அதிகரித்தது. சிறிலங்கன் எயார்லையின்சினால் வழங்கப்பட்ட வெளிநின்ற பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளும் இக்காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்து இவ்வாண்டுக் காலப்பகுதியில் தனியார் துறையினரதும் அரசிற்குச் சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளினதும் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் பொறுப்பில் குறைப்பு ஏற்படுவதற்குப் பங்களித்தது. மேலும், இவ்வாண்டுப்பகுதியில் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சி நிறுவனங்களில் பெரும் எண்ணிக்கையானவை கம்பனிகளுக்கிடையிலான கடன்களையும் பங்குதாரர் முற்பணங்களையும் பெற்றதன் காரணமாக 2020இல் நேரடி முதலீட்டுத் தொழில்முயற்சிகள் கம்பனிகளுக்கிடையிலான கடன்பாடுகள் அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தன.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2020ஆம் ஆண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைப் பதிவுசெய்தது.** வர்த்தகப்படுத்தத்தக்க படுகடன் சாதனங்களின் சந்தை விலைகளில் காட்டப்பட்டவாறு வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இருப்பு மொ.உ.உற்பத்தியின் குறைப்புடன் ஒப்பிடுகையில் கணிசமானளவிற்கு வீழ்ச்சியடைந்ததனால் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2019 இறுதியின் 65.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 60.9 சதவீதத்தில் காணப்பட்டது. பெயரளவு நியதிகளில் காட்டப்படும் போது நீண்ட கால முதிர்ச்சிகளுடனும் அதேபோன்று குறுங்கால முதிர்ச்சிகளுடனுமான மொத்த வெளிநின்ற படுகடன் 2020இல் வீழ்ச்சியடைந்தது. மேற்குறிப்பிட்ட அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், மொத்த வெளிநின்ற படுகடனில் மிகப்பெரும் கூறாகத் தொடர்ந்தும் விளங்கும் வெளிநின்ற அரச வெளிநாட்டுப் படுகடன் 2019 இறுதியின் 62.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் 57.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெயரளவு பெறுமதிகளிலும் வெளிநாட்டுப் படுகடன் விகிதத்திலும் இக்குறைப்புக்கள் காணப்பட்ட போதும், நாட்டின் வெளிநாட்டுப் படுகடன், குறிப்பாக அரசாங்கத்தின் படுகடன் அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகக் காணப்படுகின்றது. இச்சவால்மிக்க சூழ்நிலையினை அங்கீகரிக்கின்ற விதத்தில், அரசாங்கம் நாட்டின் பொருளாதாரம் வெளிநாட்டு நிதியிடலில் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கும் படுகடன் அல்லா வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களை அதிகரிப்பதற்கும் அரசாங்கம் ஏற்கனவே பல்வேறு நடவடிக்கைகளையும் எடுத்திருக்கின்ற வேளையில் கடன்களைத் தீர்ப்பனவு செய்வதும் தொடர்ந்தும் உறுதிப்படுத்தப்படுகிறது.

## 5.7.2 வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

**குறைந்த மூலதன மீள்கொடுப்பனவுகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளில் சிறிதளவு வீழ்ச்சி காரணமாக இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் குறைவாகவே காணப்பட்டன.** வெளிநாட்டுப் படுகடன் மீதான மூலதன மீள்கொடுப்பனவுகள் 2019இன் ஐ.அ.டொலர் 4,096 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 2,851 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2019இல் மீளச்செலுத்தப்பட்ட ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட நாட்டிற்கான இரு பன்னாட்டு முறிகளுடன் ஒப்பிடுகையில் 2020இல் முதிர்ச்சியடைந்த ஒரு முறி மாத்திரம் மீளச்செலுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும். இதில் ஐ.அ.டொலர் 859 மில்லியன் வதிவற்றோர் வசமிருந்தது. உள்நாட்டு வர்த்தக வங்கிகள் வசமுள்ள நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீதான மத்திய வங்கியின் அண்மைய அளவீடுகளின் அடிப்படையில் நாட்டின் முன்னர் செலுத்தப்பட்ட நாட்டிற்கான முறிகளில் கணிசமான பகுதி முதிர்ச்சியடையும் நேரத்தில் உள்நாட்டு வர்த்தக வங்கிகளுக்குச் சொந்தமாக இருந்தமை அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இதன்படி, 2020இல் தீர்ப்பனவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளில் ஐ.அ.டொலர் 859 மில்லியன் முதிர்ச்சியடைந்த முறிகள் வதிவற்றோருக்குச் செலுத்தப்பட்ட வேளையில் எஞ்சிய தீர்ப்பனவுகள் வதிவோரினால் பெறப்பட்டன. எனினும், இத்தகவல்கள் ஒப்பீட்டு

5

அட்டவணை 5.13
வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

ரூபா.மில்லியன்

| வகை | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|
| **1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | **5,757** | **4,382** |
| **1.1 கடன் தவணைக் கொடுப்பனவு** | **4,096** | **2,851** |
| பொது அரசாங்கம் | 3,176 | 2,577 |
| செயற்றிட்டக் கடன்கள் | 1,662 | 1,713 |
| படுகடன் பிணையங்கள் | 1,514 | 864 |
| மத்திய வங்கி | - | 14 |
| பன்னாட்டு நாணய நிதியம் | - | 14 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 903 | 260 |
| வெளிநாட்டு கடன்கள் | 653 | 260 |
| படுகடன் பிணையங்கள் | 250 | - |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 17 | - |
| **1.2 வட்டிக்கொடுப்பனவுகள்** | **1,661** | **1,530** |
| பொது அரசாங்கம் | 1,389 | 1,397 |
| செயற்றிட்ட கடன்கள் | 430 | 483 |
| படுகடன் பிணையங்கள் | 959 | 914 |
| மத்திய வங்கி | 37 | 19 |
| பன்னாட்டு நாணய நிதியம் | 28 | 18 |
| சுவப் மற்றும் ஏனைய பொறுப்புகள் | 9 | 2 |
| தனியார் துறை மற்றும் வைப்புக்களை ஏற்கும் கூட்டுத்தாபனங்கள் | 224 | 114 |
| வெளிநாட்டு கடன்கள் | 207 | 114 |
| படுகடன் பிணையங்கள் | 18 | - |
| நேரடி முதலீட்டு தொழில் முயற்சி கம்பனிகளுக்கிடையிலான படுகடன் | 11 | - |
| **2. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்கள்** | **19,414** | **13,083** |
| **3. பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் வருமானம் மற்றும் நடைமுறை மாற்றல்களிலிருந்தான பெறுகைகள்** | **26,392** | **20,398** |
| **4. படுகடன் பணி விகிதம்** | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 29.7 | 33.5 |
| ப.நா.நி. கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக | 29.5 | 33.2 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | |
| ஒட்டு மொத்த விகிதம் | 21.8 | 21.5 |
| ப.நா.நி. கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக | 21.7 | 21.3 |
| **5. அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள்** | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 4,565 | 3,974 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 79.3 | 90.7 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) பன்னாட்டு நாணய நிதியத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் நீங்கலாக

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

நோக்கங்களுக்காக முன்னைய ஆண்டில் கிடைக்கவில்லை. மேலும், அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள் இவ்வாண்டில் அதிகரித்தன. இவை ஐ.அ.டொலர் 1,380 மில்லியன் கொண்ட வெளிநாட்டுச் செயற்றிட்டக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளையும் ஐ.அ.டொலர் 333 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதியின் இறுதித் தவணையின் மீள்கொடுப்பனவினையும் உள்ளடக்கியிருந்தன. அதேவேளை, தனியார் துறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் வைப்புக்களை ஏற்கின்ற கூட்டுத்தாபனங்களின் வெளிநாட்டுக் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் 2019 உடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு நோய்த்தொற்றுடன் தொடர்பான நிதியியல் இடர்ப்பாடுகள் காரணமாகலாம். 2020ஆம் ஆண்டுப்பகுதியில் இலங்கை மத்திய வங்கி 2016 - 2019 காலப்பகுதியில் பெற்றுக்கொண்ட ப.நா. நிதிய - விரிவாக்கப்பட்ட நிதிய வசதியில் ஐ.அ.டொலர் 14 மில்லியன் கொண்ட முதலாவது தவணைப் பணத்தினைத் தீர்ப்பனவு செய்தது. அதேவேளை, இவ்வாண்டுப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2019இன் ஐ.அ.டொலர் 1,661 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,530 மில்லியனுக்கு வீழ்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. மேலும், வழங்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் கூப்பன் கொடுப்பனவுகள் மற்றும் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் மிதமான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. எனினும், இவ்வாண்டுப்பகுதியில், ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீடுகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்தமைக்கு வதிவற்றோர் வசமிருந்த திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் வெளிநின்ற இருப்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாகும். வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020இல் குறிப்பிடத்தக்களவில் குறைவாக இருந்தமைக்கு பொருட்கள் மற்றும் பணிகள் ஏற்றுமதிகளின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 2019இன் 29.7 சதவீதத்திலிருந்து 2020இல் 33.5 சதவீதத்திற்கு அதிகரித்தமையே காரணமாகும். மேலும், அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் நாட்டின் படுகடன் இருப்பில் பெருமளவினைப் பிரதிநிதித்துவம் செய்வதனால் அரசாங்கத்தின் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2020இல் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவில் 90.7 சதவீதத்திற்கு வகைகூறின.


5

## 5.8 செலாவணி வீத அசைவுகள்

**உலகளாவிய நோய்த்தொற்றின் உள்நாட்டுப் பரம்பல் மற்றும் ஆரம்ப முடக்கல் என்பனவற்றிற்கு முன்னர் ஒப்பீட்டு ரீதியாக உறுதியாகக் காணப்பட்ட செலாவணி வீதம் 2020 மாச்சு - ஏப்பிறல் காலப்பகுதியிலும் 2020இன் பிற்பகுதியிலும் குறிப்பிடத்தக்க அழுத்தங்களுக்குட்பட்டது.** 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து 2020 ஏப்பிறல் நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிற்குத் தேய்வடைந்த இலங்கை ரூபா 2020 ஏப்பிறல் 9ஆம் திகதி டொலரொன்றிற்கு ரூ.199.75 கொண்ட உச்சமட்டத்தினை அடைந்தது. 2020 மாச்சு நடுப்பகுதியிலிருந்து அத்தியாவசியமல்லாத இறக்குமதிகளையும் ஏனைய வெளிப்பாய்ச்சல்களையும் கட்டுப்படுத்துவதற்கு மத்திய வங்கியினாலும் அரசாங்கத்தினாலும் எடுக்கப்பட்ட வழிமுறைகளுக்குப் புறம்பாக, தேய்மான அழுத்தங்கள் நிலவிய இக்காலப்பகுதியில் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணித்

வரைபடம் 5.14

செலாவணி வீத அசைவுகள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

திரவத்தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் வெளிநாட்டுச் செலாவணி வழங்குதல் மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனான விற்றல் - வாங்கல் பரஸ்பர பரிமாற்றல்களிலும் ஈடுபட்டதனூடாக மத்திய வங்கியின் தீவிரமான தலையீடுகளைத் தேவைப்படுத்தின. எனினும், நிலைமை ஏப்பிறல் நடுப்பகுதியில் மாற்றமடைந்ததுடன் செலாவணி வீதம் 2020 நவெம்பர் வரை தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டது. 2020 நவெம்பர் இறுதியிலிருந்து நாட்டிற்கான தரமிடல் குறைக்கப்பட்டமையின் காரணமாக ஊடக சந்தை நடத்தைகள், இறக்குமதியில் ஏற்பட்ட படிப்படியான அதிகரிப்பு என்பனவற்றின் காரணமாக செலாவணி வீதத்தின் மீது அழுத்தங்கள் கட்டியெழுப்பப்பட்டமை என்பன மத்திய வங்கியின் மேலதிக வழிமுறைகளைத் தூண்டுவனவாயிருந்தன. இதற்கமைவாக, ரூபாவின் வருடாந்த தேய்வு 2020 இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 2.6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. குறுக்கு நாணயச் செலாவணி வீத அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2020 இறுதியில் இலங்கை ரூபாவானது யூரோ (11.2 சதவீதம்), யப்பானிய யென் (7.5 சதவீதம்) மற்றும் ஸ்டேர்லிங் பவுண் (6.2 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக தேய்வடைந்ததுடன் இந்திய ரூபாவிற்கெதிராக மாற்றமெதுவுமின்றியிருந்தது.

**மற்றைய முக்கிய நாணயங்கள் ஐ.அ.டொலருக்கெதிராக**



அட்டவணை 5.14

செலாவணி வீத அசைவுகள்

| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கான ரூபா | | | | | | முன்னைய ஆண்டுடனான சதவீத மாற்றம் (அ) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்டிறுதி வீதம் | | | ஆண்டுச் சராசரி வீதம் | | | ஆண்டிறுதி | | ஆண்டுச் சராசரி | |
| | 2018 | 2019 | 2020 | 2018 | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 |
| யூரோ | 208.99 | 203.67 | 229.42 | 191.71 | 200.14 | 212.07 | 2.62 | -11.23 | -4.21 | -5.62 |
| இந்திய ரூபா | 2.61 | 2.55 | 2.55 | 2.38 | 2.54 | 2.50 | 2.61 | 0.00 | -6.40 | 1.46 |
| யப்பானிய யென் | 1.65 | 1.67 | 1.81 | 1.47 | 1.64 | 1.74 | -1.02 | -7.54 | -10.36 | -5.65 |
| ஸ்டேர்லிங் பவுண் | 231.86 | 238.46 | 254.35 | 216.67 | 228.20 | 238.22 | -2.77 | -6.25 | -5.05 | -4.21 |
| ஐ.அ.டொலர் | 182.75 | 181.63 | 186.41 | 162.54 | 178.78 | 185.52 | 0.61 | -2.56 | -9.08 | -3.64 |
| சி.எ.உ. | 253.51 | 251.17 | 268.48 | 229.90 | 246.97 | 258.61 | 0.93 | -6.45 | -6.91 | -4.50 |

| தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் (ஆ) (இ) | ஆண்டிறுதி சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | | | முன்னைய ஆண்டை விட சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | ஆண்டிறுதி சுட்டெண் | | ஆண்டுச் சராசரி சுட்டெண் | |
| (2017=100) | 2018 | 2019 | 2020 | 2018 | 2019 | 2020 | 2019 | 2020 | 2019 | 2020 |
| பெ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 85.81 | 86.74 | 83.12 | 94.05 | 88.17 | 85.93 | 1.09 | -4.17 | -6.28 | -2.54 |
| உ.தா.செ.வீ 24 - நாணயங்கள் | 87.81 | 90.74 | 89.49 | 95.45 | 90.42 | 91.36 | 3.33 | -1.37 | -5.31 | 1.05 |

(அ) இலங்கை ரூபாவின் வெளிநாட்டு நாணயங்களிற்கு சமமான அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. (-) அடையாளம் என்பது ஒவ்வொரு நாணயத்துக்கும் எதிரான இலங்கை ரூபாவின் தேய்மானத்தை குறிப்பிடுகின்றது.

(ஆ) பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது (பெ.தா.செ.வீ) 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் நாணயமாற்று வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். ஒவ்வொரு நாணய கூடைகளிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தினை பிரதிபலிக்கும் வர்த்தகப் பங்குகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டது. நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்துடனும் தொடர்புடைய பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் (உ.தா.செ.வீ) கணிக்கப்படுகின்றது. கழித்தல் அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மை தாக்கமுள்ள நாணயமாற்று வீதத்தை கணிப்பிட பயன்படுத்தப்பட்டது.

(இ) நாணயமாற்று வீதமானது சுட்டெண்களின் அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்தப்பட்டதனால் ஏனைய நாணயங்களுடன் ஒப்பிடும்போது ரூபாவின் பெறுமதி உயர்வு/பெறுமதி தேய்வு என்பது தாக்கமுள்ள நாணயமாற்று வீதங்களின் சுட்டெண்களின் பெறுமதிகளின் உயர்ச்சி/வீழ்ச்சியில் நேரடியாக பிரதிபலிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.15
வங்கிகளுக்கிடையிலான முன்னோக்கிய நடவடிக்கைகளின் காலாண்டுக்கான அளவுகள்




**கலப்பான நகர்வுகளைக் காட்டின.** இதற்கமைய, 2020 இறுதியில், யூரோ (9.8 சதவீதம்), யப்பானிய யென் (5.4 சதவீதம்), ஸ்டேர்லிங் பவுண் (3.9 சதவீதம்) என்பன ஐ.அ.டொலருக்கெதிராக பெறுமதி உயர்வடைந்த வேளையில், இந்திய ரூபா (2.6 சதவீதம்) தேய்வடைந்தது. பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையின் இணைந்த தாக்கம் காரணமாக, இவ்வாண்டுப்பகுதியில் இலங்கை ரூபா சிறப்பு எடுப்பனவு உரிமைக்கெதிராக 6.4 சதவீதத்தினால் தேய்வடைந்தது.

## 5.8.1 பெயரளவு மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**கூடை நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவுகளை அளவிடுகின்ற தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன.** பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் வீழ்ச்சியடைந்து ஐ.அ.டொலர் மற்றும் கூடையிலுள்ள நாணயங்கள் எனக் கருதப்படும் மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் பெயரளவுத் தேய்மானத்தினைப் பிரதிபலித்தன. இதற்கமைய 5 நாணய மற்றும் 24 நாணயங்களின் பெயரளவுத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் முறையே 5.3 சதவீதத்தினாலும் 4.2 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, பெயரளவுத்தாக்கமுள்ள செலாவணி வீதங்களிலுள்ள வேறுபாடுகளுடன் சேர்த்து நாடுகளுக்கிடையிலான பணவீக்க வேறுபாடுகளினால் சுட்டப்படும் இலங்கையின் வெளிநாட்டுப் போட்டித்தன்மையினை எடுத்துக்காட்டும் 5 நாணய மற்றும் 24 நாணய உண்மைத் தாக்கமுள்ள சுட்டெண்கள் இவ்வாண்டுப்பகுதியில் முறையே 2.4 சதவீதத்தினாலும் 1.4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. உண்மைத் தாக்குமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் தள ஆண்டின் மட்டத்திற்கு (2017=100) மிகக் கீழே தொடர்ந்தும் காணப்பட்டு, நாட்டின் வெளிநாட்டுப் போட்டித்தன்மைக்கு செலாவணி வீதம் தொடர்ந்தும் உதவியாக அமைந்தமையினை எடுத்துக்காட்டின.

## 5.8.2 உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அபிவிருத்திகள்

**2020இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் கொடுக்கல்வாங்கல்களின் அளவு வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்கள் 2019இன் ஐ.அ.டொலர் 19,377 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 18,408 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன. உடன் கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2019இன் ஐ.அ.டொலர் 11,643 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2020இல் ஐ.அ.டொலர் 10,445 மில்லியனுக்கு (மொத்தக் கொடுக்கல்வாங்கல்களில் 56.7 சதவீதம்) குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தன. மாறாக, முன்னோக்கிய கொடுக்கல்வாங்கல்களின் மொத்த அளவு 2019இன் ஐ.அ.டொலர் 7,734 மில்லியனிலிருந்து 2020இல் ஐ.அ.டொலர் 7,964 இற்கு அதிகரித்தது. அதேவேளை, பன்னாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்காக 2020இல் தேறிய அடிப்படையில் ஐ.அ.டொலர் 282.5 மில்லியனைக் கொள்வனவு செய்தமையின் மூலம் மத்திய வங்கி உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது. இது, ஐ.அ.டொலர் 685.4 மில்லியன் கொண்ட கொள்வனவுகளினதும் ஐ.அ.டொலர் 402.9 மில்லியன் கொண்ட வழங்கலினதும் விளைவாகும்.

5